janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 டிசம்பர் 18 - டிசம்பர் 24 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 37




தேர்தல் முடிவுகள் தெரிவிக்கும் சேதி? ப 02



ஜி20-ம் இந்தியப் பிரதமரும் ப 03



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வீர தீர தியாக வரலாறு தொடர்கிறது ப 05



# ஆன்லைன் ரம்மி தடைச்சட்டம்:
## ஒப்புதல் வழங்காத ஆளுநரை கண்டித்து
# இளைஞர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்

**ஆன்லைன் ரம்மியை தடைசெய்ய தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் கொண்டு வந்துள்ள சட்டத்திற்கு உடனடியாக தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் வழங்கவேண்டும்.**

**நாடு முழுவதும் ஆன்லைன் சூதாட்டங்களை தடுத்துநிறுத்த நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றவேண்டும்.**

**ஆன்லைன் சூதாட்டத்தில் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து கடனாளியாகி துயரத்தில் தற்கொலை செய்து கொண்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**




**வடசென்னையில்** நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலத்தலைவர் த.கு.வெங்கடேசன் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் சீ.தினேஷ் கண்டனவுரையாற்றினார்.

**சேலத்தில்** மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**நாமக்கல் குமாரபாளையத்தில்** நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் கே.கணேஷ்குமார் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் க.பாரதி, தேசியக்குழு உறுப்பினர் கலை.அஸ்வினி ஆகியோர் கண்டனவுரையாற்றினர்.

**திருச்செங்கோட்டில்** நாமக்கல் மாவட்ட செயலாளர் மோகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருப்பூர் மாநகரில்** மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் ஆறுமுகம் தலைமையிலும், திருப்பூர் புறநகரில் மாவட்ட செயலாளர் எஸ்.தெய்வசிகாமணி தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருச்சி மாநகரில்** மாவட்ட செயலாளர் எம்.செல்வக்குமார் தலைமையிலும், திருச்சி புறநகரில் மாவட்டக்குழு உறுப்பினர் தமிழரசன் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணத்தில்** மாவட்டத்தலைவர் இளங்கேஸ் தலைமையிலும், தஞ்சை தெற்கு மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் எஸ்.சந்திரக்குமார் மாவட்ட செயலாளர் கார்ல்மார்க்ஸ் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**நெல்லை மாவட்டத்தில்** மாவட்டத் தலைவர் முத்துகிருஷ்ணன் தலைமையிலும்,

**ராமநாதபுரம் மாவட்டத்தில்** மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சண்முகராஜன் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**தேனி மாவட்டத்தில்** மாவட்ட துணைச் செயலாளர் சு.சரவணபுதியவன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**நாகை மாவட்டத்தில்** வேதாரண்யம், நாகப்பட்டினம், திருமருகல், தலைஞாயிறு ஆகிய ஒன்றியங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**வேதாரண்யத்தில்** மாவட்ட செயலாளர் கார்த்திகேசன் தலைமை தாங்கினார்.

**மயிலாடுதுறையில்** ஒன்றிய செயலாளர் பிரதீப் தலைமையிலும், மயிலாடுதுறை மையத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.பிரபாகரன் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். செம்பனார்கோயில் ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் (பொறுப்பு) ஐயப்பன் தலைமையிலும், சீர்காழி ஒன்றிய செயலாளர் கபிலன் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சீர்காழி ஒன்றியத்திலும் சிறப்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில்** மாவட்டத்தலைவர் எஸ்.விஜய் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திண்டுக்கல் மாவட்டத்தில்** மாவட்ட செயலாளர் வினோத் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மேலும் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் ஆன் லைன் ரம்மியை தடைசெய்யக்கோரி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற இருக்கின்றன.



**கட்சிக் கடிதம்**

# தேர்தல் முடிவுகள் தெரிவிக்கும் சேதி?





பேரன்புமிக்க தோழர்களே!

**குஜராத், இமாச்சல பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களிலும், அந்த மாநிலச் சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தல் நடைபெற்றுள்ளன. ஒன்றிய அரசு செயப்படும் டெல்லி மாநகராட்சிக்கான தேர்தலும் நடைபெற்றது. இத்துடன், உத்தரப்பிரதேசத்தில் ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் மற்ற சில மாநிலங்களில் சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத் தேர்தலும் நடந்துள்ளன. அதன் முடிவுகளும் வெளியாகி விட்டன.**

தேர்தல் முடிவுகளை வெளியிட்ட ஊடகங்கள் குஜராத் வெற்றி குறித்தே முதன்மைப்படுத்தி செய்திகளை வெளியிட்டன. இமச்சல் பிரதேச சட்டப்பேரவை தேர்தல் முடிவு உட்பட. மற்ற செய்திகளை இருட்டடிப்பு செய்துவிட்டன. இதற்கான காரணத்தை தேடி அலைய வேண்டாம், ஊரறிந்த செய்திதான்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் 18 வயது நிரம்பிய ஆண் வாக்காளர்கள், இந்த நாட்டின் குடிமக்கள் தானே வாக்களித்தார்கள். மக்கள் தீர்ப்பை விருப்பு, வெறுப்பு இல்லாமல், சார்பற்ற நடுநிலையோடு நின்று மதிக்க வேண்டிய "பத்திரிகா தருமம்" என்ன ஆயிற்று?

குஜராத் மாநில மக்கள் அளித்த ஏற்றுப் போற்றிய ஊடகங்கள் மற்ற பகுதி மக்களின் உணர்வுகளை ஏன் பிரதிபலிக்கவில்லை?, இப்படியான வினாக்கள் எழுகின்றன.

அண்ணல் மகாத்மா காந்தி பிறந்த குஜராத் மாநிலம்தான் நமது "56 இஞ்ச் மார்பு அகலம் "விரிக்கும்" பிரதமர் மோடி மற்றும் நாடாளுமன்ற நடைமுறைகளை நிராகரித்து, மக்கள் தேர்வு செய்யும் பிரதிநிதிகளை "வர்த்தகப் பண்டமாக்கும்" வித்தகர் அமித்ஷா இருவருக்கும் சொந்த மாநிலமாகும்.

பாஜக கட்சி அமைப்பில் இவ்விருவரைக் காட்டிலும் உயர்ந்த பொறுப்பில் (?!) உள்ளவர் திரு ஜெ.பி.நட்டா. இவர் கட்சியின் அகில இந்திய தலைவர் ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்.

பாஜக வின் அகில இந்திய தலைவர் ஜெ.பி. நட்டாவின் பூர்வீக பூமி இமாச்சல பிரதேசம். இங்கு பாஜக தோல்வி அடைந்தது பற்றி ஊடகங்கள் மௌனம் சாதிப்பது ஏன்?

மோடி, அமித்ஷா இரட்டையர்களுக்கு அளிக்கும் வரம்பற்ற முக்கியத்துவத்தும் அக்கட்சியின் தலைவரான நட்டாவிற்கு அளிக்க மறுப்பது ஏன்?

குஜராத் மாநிலத்தில் பாஜக மீண்டும் வெற்றி பெற்றதை நாடு முழுவதும் பாஜகவினர் கொண்டாடி மகிழ்கின்றனர்.

மோடியின் ஒன்றிய அரசுக்கு கிடைத்திட்ட அங்கீகாரம், அவரது சேவைக்கு கிடைத்திட்ட நற்சான்று, நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழி நடத்தும் முறைக்கான ஒப்புதல் என திரும்பத் திரும்ப பாஜகவினர் முழங்கி வருகின்றனர்.

பாஜவினர் பேச்சுக்களை ஊடகங்கள், தலைப்புச் செய்திகளாக வெளியிட்டு மகிழ்கின்றன.

அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களின் பரப்புரை உண்மையானால், இமாச்சலப் பிரதேசம் குறித்தும் அதே உணர்வு பிரதிபலிக்க வேண்டும் அல்லவா?

குஜராத்தில் பாஜக தனது தலைமையில் இருந்த ஆட்சியை தக்கவைத்துக் கொண்டது அவ்வளவுதான்.

மாபெரும் சாதனை, மகத்தான வெற்றி என கொண்டாடி மகிழ்பவர்கள்,

இமாச்சலப் பிரதேசத்தில் கையில் இருந்த ஆட்சியை இழந்துவிட்டதை மறைப்பது ஏன்?

திருவாளர் மோடியை அங்கீகரித்த குஜராத் மக்கள், இமாச்சல மக்களால் நிராகரிக்கப்பட்டது ஏன்?



குஜராத்தின் வெற்றி மோடி ஆட்சி கண்ட வளர்ச்சிக்கான வெற்றி எனில், இமாச்சல பிரதேச மக்களால் தீர்ப்பு, அவரது ஆட்சியின் தோல்விக்கு கட்டியம் கூறுகிறது என்றுதானே பொருள் கொள்ள வேண்டும்.




குஜராத் வெற்றியை உரக்க முழங்கி, இமாச்சல் பிரதேச தோல்வியை மறைப்பதன் மூலம் உண்மைகளை மூடி மறைத்திட இயலுமா?

குஜராத் மாடல் எத்தகைய மாடல்? நாட்டிற்கு நன்மை பயக்கும் மாடலா?

மக்களை மதரீதியாக பிளவுபடுத்துவது, ஒரு மதத்தினரை, மற்றொரு மதத்தினருக்கு எதிராக மோதலில் ஈடுபடுத்துவது, சகோதரர்களாக வாழ்ந்த மக்களிடம் பகையூட்டி கலகம் ஏற்படுத்தும் வெறுப்பு அரசியல் தானே மோடி ஷா கூட்டாளிகளின் குஜராத் மாடல்.




சிறுபான்மை மக்களின் இன அழிப்புப் படுகொலைகள் அரங்கேறியதும், தெருவெல்லாம் இரத்த சகதியாக துர்நாற்றம் வீசியதும் குஜராத்தின் வரலாற்று களங்கம் அல்லவா? அன்ற நாட்டின் தலைமை அமைச்சராக இருந்த திரு அடல்பிகாரி வாஜ்பாய், எந்த முகத்தை வைத்துக் கொண்டு நடமாடுவது என வெட்கித் தலைகுனிந்து நின்றாரே, மறந்து விட முடியுமா? அன்று உள்துறை அமைச்சர் பொறுப்பில் இருந்த திரு எல்.கே. அத்வானி மனசாட்சியை கேளுங்கள்.

கோத்ரா ரயில் எரிப்பு, அதனைத் தொடர்ந்து முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்பட்ட வெறித்தனமான தாக்குதல், நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட நூற்றுக் கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டதும், கர்ப்பிணிகள், பெண்கள் என்று கூட இரக்கம் காட்டாமல் வன்கொடுமை புரிந்தது, குழந்தைகளை துணி துவைப்பது போல், பாறைகளில் அடித்துக் கொன்ற கொடூரங்கள் எளிதில் மறக்க முடியுமா? இந்த குஜராத் மாடலை அனுமதிக்கலாமா?

மதச்சார்பின்மை, சகோதரத்துவம், நல்லிணக்க சூழல் என அனைத்திற்கும் சாவு மணி அடித்த குஜராத் மாடல் முற்றிலுமாக நிராகரிக்கப்பட வேண்டும்.

இரக்கமற்ற, குறுகிய, கொடூர, வஞ்சக அரசியலுக்கு குஜராத் மக்கள் பலியாகியது போல் நாட்டு மக்கள் பலியாக மாட்டார்கள். அப்படி பலியிடவும் முடியாது என்பதனை பாஜகவும், மோடி – ஷா கூட்டாளிகளும் அறிந்து கொள்ள வேண்டும்.

தலைநகர் டெல்லி, இங்கே ஆம் ஆத்மி கட்சி ஆட்சி நடத்தினாலும், சட்டம் ஒழுங்கு, பாதுகாப்பு தொடர்புடைய அதிகாரம் அனைத்தும் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்தில் தான் இருக்கிறது.

டெல்லியில் உள்ள காவல்துறை, அந்த மாநில முதலமைச்சரான திரு அரவிந்த் கெஜ்ரிவால் கட்டுப்பாட்டில் இருக்காது.

ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சரான திரு அமித்ஷாவிடம் தான் உள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி.

டெல்லி மாநகரம் வட டில்லி, தென் டில்லி, கிழக்கு டில்லி என மூன்று கார்ப்பரேஷன்களாக செயல்பட்டன.

அவைகள் அனைத்திலும் பாஜகவே ஆட்சி அதிகாரத்தில் இருந்தது.




மூன்றையும் ஒன்றாக்கி, டில்லி மாமன்றமாக உருவாக்கி, 250 மாமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலும் நடைபெற்றது. கடந்த டிசம்பர் 7ஆம் நாள் தேர்தல் முடிவுகளும் வந்தன. டில்லி பட்டணத்தை நீண்ட காலமாக ஆட்சி புரிந்து வந்த பாஜக படுதோல்வி அடைந்தது. ஆம் ஆத்மி கட்சி மாபெரும் வெற்றி பெற்றது.

ஒரு சட்டப்பேரவைக்கு நிகரான வாக்காளர் தொகுதி கொண்ட, மாநகராட்சி தேர்தலில் பாஜக தோற்றுப் போனது ஏன்?

மோடி அரசின் வளர்ச்சிப் பாதை இங்கே ஏன் வெற்றி பெறவில்லை?

அரிதினும் அரிதான ஜோதிட ஆராய்ச்சியாளர்களின் ஆய்வில், இதிகாச நாயகன் இராம் பிறந்த இடத்தை கண்டறிந்து (?) அங்கு சில நூறு ஆண்டுகள் முன்பு மனிதர்களால் கட்டப்பட்ட பாபர் மசூதியை தகர்த்து, தரைமட்டமாக்கி காவிக் கூட்டம் தர்பார் நடத்திய பூமியில்,

தொடர்ச்சி 3ம் பக்கம்



மு.வீரபாண்டியன்




# ஜி20-ம் இந்தியப் பிரதமரும்

**ஜி-20 தலைமை பொறுப்பு இந்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இது சுழற்சி முறையில், இதில் அங்கம்பெற்றுள்ள நாடுகளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் பதவி. இந்த பதவியை உள்நாட்டு கட்சி அரசியலுக்கு பயன்படுத்தக்கூடாது. ஆனால், பிரதமர் இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிகளை மேற்கொள்வதாக தெரிகிறது.**




இதற்காகத்தான் அவர் ஒரே குடும்பம், ஒரேபூமி, ஒரே கலாச்சாரம் எனும், தமது ஓர்மை கொள்கைகளை பிரகடனப்படுத்துகிறார். 40 கட்சிகளுக்கு அழைப்பு விடுத்து – ஜி 20 கடமைகளை நிறைவேற்ற ஒத்துழைப்பு கோருகிறார். நாடு முழுவதும் 200 மாநாடுகளுக்கு திட்டமிட்டுள்ளார்.

உலக நாடுகள் தன்னை அங்கீகரித்து விட்டதாகவும், இந்திய மக்களும் இதனைப் புரிந்து தன்னை மீண்டும் பிரதமராக்குங்கள் என்ற அரசியல் செய்தியை சொல்லாமல் சொல்கிறார் பிரதமர்.

சரி ஜி 20 என்பது என்ன?

முன்னர் ஜி 7 என்ற அமைப்பின் விரிவாக்கம் தான் இது. ஜி 7 என்பது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மன், ஜப்பான், கனடா என்பது. இவை உலகின் மேலாதிக்க நாடுகள். தங்கள் கொள்கைகளை குறிப்பாக வர்த்தக மற்றும் நிதி கொள்கைகளை உலகின் மீது திணிப்பவை. பிரிக்ஸ் கூட்டமைப்பின் செயல்பாட்டால் ஜி 7 தடுமாறியது. பிரிக்ஸ் கூட்டமைப்பில் ரஷ்யா, இந்தியா, சீனா, பிரேசில், தென்னாபிரிக்கா அங்கம் வகிக்கிறது.

இந்நாடுகளின் ஜி.டி.பி. அதிகம். மக்கள் தொகை அதிகம். சந்தை பெரியது. இராணுவ பலம், தொழில்நுட்பம் என ஜி 7க்கு சவாலாக எழுகிறது. எனவே இந்நாடுகளையும் இணைத்துக் கொள்வது என முடிவு செய்து ஜி 20 என விரிவாக்கம் செய்துவிட்டனர். 7 பேர் உலகை மேலாதிக்கம் செய்தது, தற்போது 20 பேர் மேலாதிக்கம் செய்கிறார்கள் என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன.

ஜி 20ல் தற்போது அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மன், இத்தாலி, கனடா, ஜப்பான், பிரான்ஸ், இந்தியா, சீனா, ரசியா, தென் ஆப்பிரிக்கா, பிரேசில், ஆஸ்திரேலியா, துருக்கி, தென்கொரியா, மெக்சிகோ, சவுதி, ஐரோப்பிய யூனியன், தென்கொரியா, அர்ஜென்டினா என அங்கம் வகிக்கின்றன.

முதலில் இது ஐ.நா.போல் அதிகாரப்பூர்வமான அமைப்பல்ல. வலுவான நாடுகள் தமக்குத்தாமே ஒரு அமைப்பை உருவாக்கிக் கொண்டனர்.

இந்த அமைப்பிற்கு வெளியேநூற்றுக்கும் மேற்பட்ட சிறிய, நடுத்தர, ஏழை நாடுகள் உள்ளன. இந்த நாடுகளுக்கும் ஜி 20க்கும் சம்பந்தமில்லை. பொருளாதார கொள்கை, குறிப்பாக வர்த்தக கொள்கைகளை வகுக்கும்போது சிறிய நாடுகளின் கருத்துக்களை கூட கேட்பதற்கு எந்த ஏற்பாடும் இல்லை. தங்கள் நலன் எனும் கதி போக்கை எளிய நாடுகள் மீது திணித்து வருகிறார்கள். ஏழை நாடுகளுக்கு வேறு வழி இல்லை என்றாகி வருகிறது.

**சரி ஐ.நா. போல் சட்ட விதிகள் உண்டா? என்றால் இல்லை. சரி ஐ.நா. இவர்களை கட்டுப்படுத்துமா? என்றால் இல்லை. ஒருபோதும் இயலாது. வீட்டோ ரத்து அதிகாரம் கொண்ட ஐந்து நாடுகளும் ஜி 20ல் அங்கம் வகிக்கிறது. ஜி 20 நாடுகளால் ஐ.நா. சபைக்கு என்ன பயன்? பயன் என்பதை விட ஐ.நா. நோக்கங்களை ஜி 20 சிதைக்கிறது. அதன் ஆதாரங்களை அர்த்தமற்றதாக்குகிறது.**

ஐ.நா. என்பது உறுப்பு நாடுகளின் கூட்டமைப்பு. வரலாற்று வழியில் உருவானது. போர் கூடாது, ஒத்துழைப்பு மற்றும் ஒன்றுக்கொன்று உதவுவது எனும் நிலைகளுக்காக உருவானது. இவை அனைத்தையும் ஜி20 கடந்து செல்கிறது.

இவை இவ்வாறு இருக்க ஜி 20க்கு பிரதமர் வழங்கிய கருப்பொருளில், ஒரே பூமி, ஒரே கலாச்சாரம், ஒரே எதிர்காலம் என்கிறார். அப்படி எனில், உலகம் இதுவரை கண்டிராத எடிலாக் நோய் பரவிய ஆப்பிரிக்காவில் எத்தனை ஐரோப்பிய– அமெரிக்க நாடுகள் மருத்துவ உதவிக்கு சென்றன.

ஒரே பூமி தானே, இந்த புவியில் ஐரோப்பிய, அமெரிக்க தொழில் நுட்பங்கள் எத்தனை ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளுக்கு பகிரப்பட்டுள்ளது.

நமது பூமி ஒன்று என்றால், கொரோனா நோய்த் தொற்றில், ஏன் ஐரோப்பா கதவுகளை மூடிக் கொண்டது. ஏன் அமெரிக்கா மருத்துவ ஆய்வுகளை சொல்லித் தரவில்லை. ஒரே பூமியில் நோய்த் தொற்று மருந்து ஏன் விற்கப்பட்டது. ஒரே பூமியில் ஒரு பக்கம் இலவசம் – மறு பக்கம் விலை.

சரி ஒரே கலாச்சாரம் எனில், ஐரோப்பிய கலாச்சாரம் ஆப்பிரிக்காவில் பரவி உள்ளது. இத்தனை நூற்றாண்டில் ஆப்பிரிக்க கருப்பின கலாச்சாரமோ, ஏழை ஆசிய நாடுகளின் கலாச்சாரமோ ஐரோப்பாவில் பரவி உள்ளதா? அப்படி பரவினால் ஐரோப்பா ஏற்குமா?

ஒரே கலாச்சாரம் என்பதை விட, பிற கலாச்சாரங்களுக்கு மதிப்பளிப்பதே மானுட விழுமியம். ஒரே எதிர்காலத்திற்கு வரலாம், கடந்த காலத்தை விட்டு விடலாம். அது முதிராத காலம். போர், படை எடுப்பு, நாடுகளை கைப்பற்றுவது, இனப்படுகொலை கள், புலம்பெயர் மரணங்கள், தொற்று நோய்கள், அணுகுண்டு வீச்சு என கடந்த காலம் முதிராத காலம் என கடந்து செல்லலாம்.

இன்றைய உலகில் எதிர்காலம் கூட மிக மிக தாமதமானது. எனினும் எத்தியோப்பிய குழந்தைகளுக்கு எது எதிர்காலம்?

ஆப்பிரிக்க குழந்தைகளின் கல்வி, உணவு, செலவுகளும், ஐரோப்பிய குழந்தைகளின் கல்வி, உணவு, செலவுகளை மதிப்பீட்டாலே தெரியும் ஒரே எதிர்காலம் பற்றி.

இது தான் ஒரே எதிர்காலமா?!

உக்ரைன் குழந்தைகளுக்கு எது எதிர்காலம்? குண்டுகளும், தீப்பிழம்புகளுமா?

ஐரோப்பாவும், அமெரிக்காவும், ரஷ்யாவும் போரை தொடர்ந்தால் எதிர்காலம் ஒரே மாதிரியாகவா இருக்கும்?

ஏழை நாடுகள் ஏழையாகவும், பணக்கார நாடுகள் மென்மேலும் பணம் படைத்த நாடுகளாகவும் மாறினால் ஒரே எதிர்காலம் சாத்தியப்படுமா?

மேலாதிக்கமும், மூச்சுத் திணறலும் ஒரே எதிர்காலத்தை சாத்தியப்படுத்துமா என்ன?

பிரதமரின் கருப்பொருள் இன்றைய முதலாளித்துவ உலகில் பொருளற்றது.

---

1 ம் பக்கத் தொடர்ச்சி

நம்பிக்கை அடிப்படையில் நமது நாட்டின் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைக் கொண்டு பல ஆயிரம் கோடி செலவிட்டு, கட்டப்பட்டு வரும் ராமர் கோயில் கட்டப்படும் உத்திரப் பிரதேசத்தில் மெயின்புரி நாடாளுமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. இங்கு சமாஜ்வாடி கட்சி மிக அதிகமான வாக்குகளில் அதாவது, இரண்டு லட்சத்து, என்பத்தெட்டா யிரத்து, நானூற்று அறுபத்தோரு (2,48,461) வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. பாஜக படுதோல்வி அடைந்துள்ளது.

மோடியின் வளர்ச்சி முழக்கம் அங்கே ஏன் செல்லாமல் போனது?

உ.பி., ராஜஸ்தான், ஒடிசா, பீகார், சத்தீஸ்கர் ஆகியமாநிலங்களில்காலியாகஇருந்த ஆறு சட்ட மன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நடைபெற்றன. இதில், நான்கு தொகுதிகளில் பாஜக படு தோல்வி அடைந்துள்ளது.

இரண்டு மாநில சட்டப்பேரவைத் தேர்தலில், இமாச்சலப் பிரதேசத்தில் பாஜக ஆட்சி இழந்து, படு தோல்வி அடைந்தது.

நாடாளுமன்ற இடைத்தேர்தல்களில் பாஜக தோல்வி.

சட்டப்பேரவைகளுக்கான ஆறு தொகுதிகளில் பாஜக நான்கில் தோல்வி.

தான் ஆட்சி புரிந்திட்ட டெல்லி மாநகரத்தில் பாஜக தோல்வி. தோல்வி மேல் தோல்வி. பாஜகவின் படுதோல்விகளை பாஜக மூடி மறைப்பது புரிகின்றது.

பாஜகவின் அழுத்தங்களுக்கு ஊடகங்களும் பணிந்து போகின்றன. ஜால்ரா தட்டுகின்றன ஏன்?

தொலைக்காட்சிகளும், நாளேடுகளும் யார் கையில்?

நடுநிலை நாளேடு, மக்களின் மனசாட்சி என பிரகடனப்படுத்தி பெருமை கொள்ளும் ஊடகங்கள் ஒரு கட்சி பக்கம் சார்ந்து செயப்படுவது எதற்காக?

ஊடகங்கள் உள்ளதை உள்ளபடி எழுதவும், வெளியிடவும் வேண்டாமா?

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்க வேண்டிய ஊடகத்துறை ஒரு பக்கம் சாய்ந்திடல் தகுமோ? தருமமோ?

ஜனநாயகத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடிய செயல் அல்லவா? அதிகாரத்தை கண்டு அஞ்சி நடுங்குவது தகுமோ?

“நரிக்கு நாட்டாமை கொடுத்திட்டால் கிடைக்கு எட்டாடு கேட்குமாம்” என்றொரு பழமொழி உண்டு! அதனை மெய்ப்பிக்கும் வகையில் தான் இன்றைய மோடியின் ஒன்றிய அரசு செயல்பட்டு, வருகின்றது.

தனது ஆட்சியின் அலங்கோலத்தை, தோல்விகளை மூடி மறைக்க பல சாகசங்களை மேற்கொண்டு வருகின்றது.

ஜி 20 நாடுகளுக்கு இந்தியா தலைமை ஏற்பது ஒன்றும் பெரும் சாதனை அல்ல. தலைமை ஏற்பதால் இந்தியா நாட்டு மக்களின் வாழ்வில் வசந்தம் ஏற்பட்டு விடப் போவதுமில்லை.

சுழற்சி முறையில் ஒவ்வொரு ஆண்டும் ஒருநாடு தலைமை வகிக்கின்ற வாய்ப்பினை பெறுகின்றது. இம்முறை இந்தியாவிற்கு கிடைத்துள்ளது. அடுத்து வேறு ஒரு நாட்டிற்கு தலைமை பொறுப்பு மாறும் இதனை எல்லோரும் அறிவார்கள். ஆனால், திரு மோடி, உலக நாடுகள் அனைத்தும் சேர்ந்து, நிரந்தரத் தலைவராக, அவரை ஏற்றுக் கொண்டது போல் தோற்றத்தை உருவாக்கி வருகிறார். இதன் மூலம் தங்களின் ஆட்சி மீது மக்களுக்கு உள்ள அதிருப்தியை, கோபத்தை, கொந்தளிப்பை தனித்துக் கொள்ள எத்தனித்து வருகிறார்.

அரசு அதிகாரச் செல்வாக்கால் படுதோல்விகளையும், மூடி மறைப்பதில் மோடி வெற்றி பெறலாம். ஆனால், வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் அவர் சந்திக்கும் தோல்வியை தடுக்க முடியாது.

மோடி, ஷா இரட்டையர்களும், ஆர்எஸ்எஸ், பாஜக பரிவாரங்களும் கட்டமைத்து வரும் கற்பிதத்தை உடைத்தெறியும் சக்தி உழைக்கும் மக்களின் ஆற்றலாகும்.

தொழிலாளர்கள், விவசாயிகள், உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட உணர்வை தாங்கிவரும் “ஜனசக்தி” வார இதழ் மோடியின் பொய் முகத்தை தோலுரித்து காட்டும் அரசியல் கட்டுரைகள்/ தத்துவ கருத்துக்கள் தாங்கிய சிறப்பிதழ் வெளியிடுகிறது. அதனை இல்லம் தோறும் கொண்டு சேர்ப்பது கட்சி உறுப்பினர்களின் கடமைப் பொறுப்பாகும். கட்சியின் 98 வது அழைப்பு தினத்தில் ஜனசக்தி சிறப்பிதழையும், மாத நாட்காட்டியினையும் இல்லந்தோறும் கொண்டு செல்வோம்.


குழப்புவோர் வாயடைக்க குழம்புவோர் உள்ளம் தெளிவடைய ஜனசக்தி கருத்தாயுதம் தாங்கி வருகிறது. விற்பனையான பணத்தை ஜனசக்திக்கு உடனே அனுப்ப வேண்டும்.

மேலும், ஆண்டு சந்தா சேர்ப்பது, முகவர்கள் நியமனம் செய்வது, அதன் மூலம் ஜனசக்தி பிரதிகளை ஆயிரக்கணக்கில் மக்களிடம் கொண்டு செல்வது என்ற உடனடி பணிகளை மேற்கொள்வோம்! உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவோம்!

“உண்மை ஒரு நாள் வெளியாகும் அதில் உள்ளங்கள் எல்லாம் தெளிவாகும்.... என்பது பட்டுக்கோட்டையாரின் பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,



இரா.முத்தரசன்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 37

## பிணம் தின்னும் சாத்திரங்கள்

சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்ட (ஊபா)செயல்பாடு குறித்து ஒரு கேள்வி நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்டுள்ளது.

அந்தத் தொகுப்பு பின்வரும் கேள்விகளை உள்ளடக்கியது. கடந்த மூன்று ஆண்டுகளில், ஊபா சட்டத்தின் கீழ் எந்தெந்த மாநிலங்களில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்? ஒவ்வொரு மாநிலத்திலும் எத்தனை பேர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது? இந்தச் சட்டத்தின்படி புலன் விசாரணையையும், தீர்ப்பு வழங்குவதையும் விரைவுபடுத்துவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா? ஒரு வழக்கில் புலன் விசாரணை, நீதி விசாரணை நடந்து தீர்ப்பளிப்பதற்கு சராசரியாக எவ்வளவு காலம் ஆகிறது? தவறான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டவர்கள், நிரபராதிகள் என விடுவிக்கப்படும் போது அவர்களுக்கு இழப்பீடு ஏதும் தருகிற முறைமை உள்ளதா?

ஊபா சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு விட்டால், உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே அது எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்ற கேள்வி மிக முக்கியமானதாகும்.

ஒன்றிய அரசின் சர்வ அதிகாரங்களும் கொண்டவராகத் திகழும் உள்துறை அமைச்சர் அமித்ஷா இந்த கேள்விக்கு பதில் அளிக்கவில்லை. பதில் அளிக்க வந்தவர் அந்த துறையின் துணை அமைச்சர் நித்தியானந்த் ஆவார்.

அவர் சொன்னார்: "இந்தக் கேள்விகள் குறித்து பதில் தருவதற்கான தரவுகள் எதுவும் அரசிடம் இல்லை!" எப்போதெல்லாம் 'குட்டு' உடைக்கும் கேள்விகள் வருகிறதோ, அப்போதெல்லாம் இந்த அரசிடம் தரவுகள் இல்லாமல் போகும்!

மேலும், "மாநில அரசுகளின் காவல்துறைகளே வழக்குகளை விசாரிப்பதால், பயங்கரவாதம் தொடர்பான வழக்குகளை எப்படி விசாரிக்க வேண்டும் என்பதற்கான திறன் மேம்பாட்டை, அவர்களுக்கு ஒன்றிய அரசு ஏஜென்சிகள் சொல்லித் தர, ஏற்பாடு செய்ய முயற்சிப்பதற்கான திட்டம் ஒன்று ஆய்வில் இருக்கிறது" என்றும் வெண்டைக்காயை விளக்கெண்ணையில் தோய்த்து எடுப்பது போல பதிலை அவர் கூறியிருக்கிறார்.

2021 ஆம் ஆண்டு முடிவில், 3998 பேர் ஊபா வழக்குகளின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 102 பேர் மீதுதான் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மற்ற அனைவரும் இன்னும் விசாரணையே இல்லாமல் சிறைச்சாலைகளில் உள்ளனர்.

இந்தச் சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கு அரசு என்ன செய்கிறது என்ற கேள்விக்கு, அந்தச் சட்டத்திலேயே அதற்கான வழிவகை இருக்கிறது என நழுவல் பதிலை அரசு அளித்து இருக்கிறது.

இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்தவரான ஸ்டேன் சாமி, பார்க்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டு, உணவு உட்கொள்ள முடியாத நிலையில் உறிஞ்சி குடிக்க ஒரு 'ஸ்ட்ரா' தர வேண்டும் எனக் கேட்டு, நீதிமன்றம் வரை சென்று, அவ்வாறு தர சிறை விதிகளில் இடமில்லை என பதில் அளிக்கப்பட்டு, அந்த அற்ப பொருள் தரப்படாமலேயே மாண்டு போன கொடுமையை நாடு அவ்வளவு சீக்கிரம் மறந்து விடாது.

எல்கார் பரிஷத் நிகழ்வு தொடர்பாக கைது செய்யப்பட்ட ஸ்டேன் சாமிக்கு மாவோயிஸ்டுகளுடன் தொடர்பு இருப்பதாகவும், அவரது மடிக்கணினியில் இதற்கான ஆவணங்கள் இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இது குறித்து எண்ணியல் ஆய்வு அவசியம் என சாமியின் வழக்கறிஞர்கள் வலியுறுத்தினர். அதன்படி நடத்தப்பட்ட ஆய்வில் சில உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

2014ஆம் ஆண்டிலிருந்து, சாமியின் மடிக்கணினிக்குள், 'நெட்வொயர்' என்ற தீய மென்பொருளை வெளியிலிருந்து செலுத்தி, அந்தக் கணினியின் கடவுச்சொல் மற்றும் தட்டச்சு முறையைக் கைப்பற்றி, ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயக்கியிருப்பது தெரிய வந்துள்ளது.

அவரிடம் இருந்து 24 ஆயிரம் கோப்புகள் நகலெடுக்கப்பட்டுள்ளன. மேலும் அவருக்கே தெரியாமல் மறைவுக் கோப்புகளின் மூலம் சில டஜன் கோப்புகள் உள்ளே திணிக்கப்பட்டுள்ளன. அவற்றில் தான் மாவோயிஸ்டுகளுடன் அவருக்கு தொடர்பு இருப்பது போன்ற கடிதங்கள் வைக்கப்பட்டுள்ளன.

அவரை 2019 ஜூன் 11ஆம் தேதி அன்று இரவு காவல்துறை கைது செய்து, அவரது மடிக்கணினியை கைப்பற்றியது. அதற்கு முந்தைய நாள், அவரது கணினியை வெளியில் இருந்து ஹேக் செய்தவர், அதிலிருந்து தான் ஆவணங்களை நகலெடுத்தது, புதிய கோப்புகளை உள் செலுத்தியது பற்றிய தகவல்களையும் மற்றும் இவற்றைச் செய்த 'நெட்ஒயர்' தீய மென்பொருளையும் சுவடு தெரியாமல் முற்றிலுமாக அகற்றியுள்ளார் என இந்த ஆய்வின் மூலம் தெரிகிறது.

"பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்பது இன்னுமொரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது!.

### கிராமப்புற வீரர்களை அடையாளம் கண்டால்தான்

# விளையாட்டு துறையை மேம்படுத்த முடியும்

### மக்களவையில் எம்.செல்வராசு பேச்சு

நாடாளுமன்ற மக்களவையில் டிச. 08 அன்று விளையாட்டுத்துறை மேம்பாடு குறித்த விவாதத்தில் தோழர் எம்.செல்வராசு பேசியதாவது:



M. Selvaraj, CPI, Nagapattinam (Tamil Nadu)

மிக முக்கியமான ஒரு கருத்தை இந்த அவையில் இன்றைக்கு நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். நமது தேசம் ஒரு பரந்துபட்ட தேசம். 130 கோடி மக்களைக் கொண்ட தேசம். இது ஒரு வலிமையான தேசமாக உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு விளையாட்டுத்துறையில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். தேசத்தில் இருக்கக்கூடிய இளம்தலைமுறையினர் நல்ல மனநிலையோடு, நல்ல ஆரோக்கியத்தோடு, உள்ளத் தெளிவோடு இருக்க வேண்டியது மிக அவசியமானது. இதையெல்லாம் வழங்குவது விளையாட்டு தான். விளையாட்டுத் துறையின் மூலமாகத்தான் இந்தத் தெளிவைப் பெற முடியும்.

அந்த அடிப்படையில், நமது தேசத்தின் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு 'கெலோ இந்தியா' திட்டம் ஒரு மிகச் சிறந்த திட்டம் என்பதை நான் முதலிலே வரவேற்கிறேன். விளையாட்டுத்துறைக்கு ஒதுக்கப்படுகிற நிதியை அதிகப்படுத்த வேண்டும் என்பதையும் நான் சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன்.

அத்துடன் இந்தத் தேசத்தின் விளையாட்டு என்று சொல்லுகிற போது, கபடி என்பது நமது தேசத்தின் விளையாட்டு. தேச விளையாட்டு என்று சொன்னால் கபடி. ஆனால், இன்றைக்கு கபடிக்கு நமது அரசு எந்த அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

கிராமம் என்பது எல்லாவற்றிற்கும் முக்கியமானது. மகாத்மா காந்தி அவர்கள் கிராம ராஜ்ஜியம் என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். கிராமப்புறத்திலே உள்ள பல்வேறு விளையாட்டு வீரர்களை நாம் அடையாளம் காண வேண்டும். அடையாளம் காணுகிற பணியை இந்த அரசு முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

ஆயிரமாயிரம் இளைஞர்கள் சீருடை இல்லாமல், காலனி இல்லாமல், நல்ல உணவு கிடைக்காமல் பயிற்சி எடுத்து வருகிறார்கள் என்பது அரசுக்கு எந்த அளவிற்கு தெரியும் என்பது எனக்குத் தெரியாது. இந்த அரசு அதில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்றைக்கு நாம் தொலைக்காட்சியிலே பார்க்கிற ஒரே ஒரு விளையாட்டு கிரிக்கெட் தான். கிரிக்கெட் என்பது நல்ல விளையாட்டு தான். அதே சமயத்திலே, மற்ற விளையாட்டுகளையும் மேம்படுத்துவதற்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**தீண்டாமை எந்த அளவிற்கு விளையாட்டில் புகுந்திருக்கிறது என்பதை நாம் கூர்மையாக கவனிக்க வேண்டும். விளையாட்டுத் துறையில் எத்தனை தலித் இருக்கிறார்கள்? என்று நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்கிறேன். கிரிக்கெட் விளையாட்டில் எத்தனை தலித் இருக்கிறார்கள்? என்று நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்கிறேன்.**

சமத்துவம், சமூக நீதி பற்றி பேசுகிற இந்த தேசத்திலே, விளையாட்டுத்துறையில் அனைத்து சமூகங்களும் பங்கேற்கிற ஒரு பண்பாட்டை உருவாக்கும் போதுதான் இந்த நாடு, முன்னேறுகிற நாடாக, மற்ற நாடுகளுடன் போட்டியிடும் நாடாக இருக்க முடியும்.

கத்தாரைப்பற்றிச் சொன்னார்கள். ஒரு சிறிய நாடு விளையாட்டுத்துறையில் உலக அளவிலே சிறந்து விளங்குகிறது. ஆனால் 130 கோடி மக்களைக் கொண்ட நமது தேசம் விளையாட்டுத் துறையில் 50 வது இடத்திலே இருக்கிறது. இதை மாற்றும் வகையில் விளையாட்டுத்துறையை மேம்படுத்த வேண்டும். ஆரம்பக்கல்வி முதல் விளையாட்டை ஒரு கட்டாய பாடமாக ஏற்படுத்தப்பட வேண்டும். அது மட்டுமல்ல, கிராமப்புற விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு, அவர்களை மேம்படுத்துவதற்கான முயற்சியை எடுக்கும் போதுதான், கபடி, ஹாக்கி என்று பல்வேறு விளையாட்டுகளிலும் நாம் முன்னணி வகிக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வலியுறுத்துகிறேன். இவ்வாறு பேசினார்.

## 37 வது தேசிய புத்தக கண்காட்சி கோவை காந்திபுரத்தில் துவங்கியது

37 வது தேசிய புத்தக கண்காட்சி கோவை காந்திபுரத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

இந்த புத்தகக் கண்காட்சியை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா. கார்த்திக் திறந்து வைத்தார். பேராசிரியர் அ. ராமசாமி முதல் விற்பனையை துவக்கி வைத்தார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட செயலாளர் சி. சிவசாமி மற்றும் டாக்டர் என். ஜி. பி. கல்வி நிறுவனங்களின் கல்விசார் இயக்குனர் பேராசிரியர் பெ.இரா. முத்துசாமி ஆகியோர் முதல் விற்பனை நூலை பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிகளுக்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில பொருளாளர் ப. பா. ரமணி தலைமை தாங்கினார். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மண்டல மேலாளர் ஆர். ரங்கராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாமன்ற உறுப்பினர்கள் எம். டி. மோகன், மல்லிகா புருஷோத்தமன், பிரபா ரவீந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி தமிழ் துறை தலைவர் முனைவர் இரா. மணிமேகலை, கே. ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ் துறை தலைவர் முனைவர் கோ. ஜெகதீஸ்வரி, பல்லடம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உதவி பேராசிரியர்



பெ. கமலா, கோவை டாக்டர் ஜி. ஆர். தாமோதரன் அறிவியல் கல்லூரி தமிழ் துறை தலைவர் சே. தங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நியூ செஞ்சுரி புத்தக நிறுவன கோவை கிளை மேலாளர் எஸ். குணசேகர் நன்றியுரை கூறினார்.

இந்த புத்தகக் கண்காட்சியை மத்திய அரசு நிறுவனமான நேஷனல் புக் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்துகின்றன.

# 98 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# வீர தீர தியாக வரலாறு தொடர்கிறது



எம்.ரவி

**இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சிக்கு வயது 98. உன்னதமான தேசபக்தர்களின் போராட்ட தத்துவ ஆயுதமாக மார்க்சீயம் மிளிர்ந்ததன் விளைவால் தோன்றியதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி. தியாகத் தீயில் புடம் போட்டு எடுக்கப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு மெய்சிலிர்க்க்க வைக்கும் வரலாறு. இந்திய அரசியல் வரலாற்றில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஈடு இணையான இயக்கம் எதுவுமே யில்லை. வரலாற்று புகழ்மிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சந்தித்த இடையூறுகள், சோதனைகள் கணக்கில் அடங்காது.**

பிரிட்டீஷ் ஏகாதிபத்தியமும், இந்திய அரசாங்கமும் சதிவழக்குகளைப் போட்டு சமாதி கட்ட நினைத்தார்கள்.

அடக்கு முறையை ஏவிவிட்டு அழித்திடப் பார்த்தார்கள்..

ஒடுக்குமுறைகள் மூலம் ஒழித்துக்கட்டப் பார்த்தார்கள்...

அவதூறுகளை அள்ளிவீசி அவமதித்தார்கள்...

ஆனால், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை அழிந்திட முடியவில்லை,

ஒழித்திட முடியவில்லை...

அதேபோல், மதிப்பீடுகளில் செய்த தவறுகள், கட்சியில் ஏற்பட்ட பிளவுகள், கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுகள், தேர்தல்களில் ஏற்பட்ட தோல்விகள் இவைகளாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அசந்து துவண்டு சோர்ந்து போய்விடவில்லை. பீனிக்ஸ் பறவையைப்போல் மீண்டும் மீண்டும் உயிர்த்தெழுந்து வளர்ந்து வருகிறது. இன்றைக்கு இந்தியாவின் சரியான புரட்சிகர இயக்கமாக வர்க்கப் போராட்டத்தின் ஈட்டி முனையாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திகழ்கிறது. இந்திய மனிதநேய மரபின் சின்னமாக சுடர்விட்டு பிரகாசித்து கொண்டுள்ள மகத்தான மக்கள் இயக்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

**இந்திய அரசியல் வளர்ச்சிப்போக்கில் நடைமுறையில் வெவ்வேறுவிதமான சில தவறுகளை செய்திருந்தாலும் ஒருபோதும் எந்தச் சூழ்நிலையிலும் தொழிலாளி வர்க்கத்திற்கும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும், மார்க்சீய, லெனிய தத்துவத்திற்கும் இந்திய மக்களுக்கும் விரோதமான முறையில் அவைகளுக்கு தீங்கிழைக்கும் வகையில் எந்தவிதமான தவறுகளையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செய்ததேயில்லை.**

இவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் வாழையடி வாழையாக இருந்துவரும் ஒவ்வொறு உறுப்பினருக்கும் மிகப்பெரும் பெருமையளிக்கும் விசயமாகும்.

இந்திய மண்ணில் வேரூன்றியிருந்த மனிதநேய மரபுகளும், நீண்ட நெடிய காலமாக இந்தியாவில் இருந்துவந்த சமூக சீர்திருத்தக் கருத்துகளும், நூறாண்டுகாலமாக பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்துவந்த விடுதலைப் போராட்டமும், உழைக்கும் மக்களும், விவசாயிகளும், தங்களது உரிமைக்காக நடத்திய கலகங்களும் ருஷ்யாவில் நடந்த மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சியின் தாக்கமும் இந்தியாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்தன.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெருந்திரளாக தொழிலாளர் பங்குபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் ஆங்காங்கே சிறு, சிறு குழுக்களாகச் செயல்பட்டுவந்த கம்யூனிஸ்டுகள் ஒன்றிணைந்த ஒழுங்கமைக்கப்பட்டு 1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் தேதி உத்திரபிரதேசத்தில் உள்ள கான்பூர் நகரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி




தோற்றுவிக்கப்பட்டது.

கான்பூர் என்பது கங்கை நதிக்கரையில் அமைந்துள்ள தொன்மையான நகரம். மகாபாரதக் கதையில் கொடை வள்ளலான கர்ணனின் ஆட்சிப்பகுதியாக கான்பூர் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. கர்ணாபூர் என்பது தான் கான்பூர் என்று அழைக்கப்படுவதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

1925 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ல் தமிழ்நாட்டைச் சார்ந்த சிந்தனை சிற்பி சிங்காரவேலர் தலைமையில் துவக்கப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அவரது தலைமை உரையின் வாயிலாக கட்சியின் நோக்கங்களையும், திட்டத்தையும் மிகத்தெளிவாக பகிங்கரமாக வெளி யிட்டது.

### சிங்காரவேலரின் தலைமையுரையின் மிகச்சுருக்கம்:

தோழர்களே, இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுகளாகிய நமது குறிக்கோள் இங்குள்ள மனிதர்கள் எல்லோருக்கும் நல்ல வாழ்க்கை வேண்டும். பசியற்ற வாழ்வு, நோய்நொடிகள் அற்ற அகால மரணமில்லாத பெருவாழ்வு, அறியாமை நீங்கிய வாழ்வு வேண்டும் என்பதேயாகும்.

இந்தியாவில் கம்யூனிசக் கொள்கையை படிப்படியாக அமைதியாக கடைப்பிடிப்பதன் மூலம் மேற்கண்ட சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்த முடியும் என நாம் நம்புகிறோம்.

இந்தியாவின் எதிர்காலம் கம்யூனிஸ்டுகளின் கையில் உள்ளது. மிக உயர்ந்த இந்தியாவைப் படைக்க நாம் கனவு காண்கிறோம். எனவே, எளியோரை வலியோர் சுரண்டுவதிலிருந்தும், பசி, பட்டினி, நோய், அகாலமரணம் ஆகியவைகளிலிருந்தும் அனைத்து மனிதர்களும் விடுதலை பெறவேண்டும் என்பதே நமது உயர்ந்த எண்ணங்களாகும்.

எந்த தடையுமின்றி, எவ்வித இடையூறுகளுமின்றி, தொழிலாளர்கள் மிக உயர்ந்த பொருட்கள், விஞ்ஞானம், கலாச்சாரம் ஆகியவைகளை அனுபவிக்கும் உரிமையைப் பெற வேண்டும். இத்தகைய புரட்சி கீதத்தை இசைக்கும் சுந்திர இந்தியாவை பற்றி நாம் காணும் கனவை நிறைவேற்ற பாடுபடுவோம்.

மேலும், வரலாற்று காலந்தொட்டு நமது மக்களின் ஒற்றுமையை விழுங்கும் பேய்களாக சாதி, மதங்கள் இருந்து வருகின்றன. இந்த சாதி மத வேற்றுமைகள் இன்று நமது நாட்டை சின்னாபின்னப்படுத்த முயல்கின்றன. இந்த கேடு கெட்டவைகளை நம்முன் ஆர்ப்பரித்துக் காட்டுவோர் நம் நாட்டிற்கும் நமது குறிக்கோளுக்கும் பகைவர்கள் ஆவர் என்பதையும் தெரி வித்துக்கொள்கிறேன் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் குறிக்கோள் என்ன என்பது குறித்து அறிக்கையாக வெளியிட்டார்.

ஆனால், அதற்கு பின்னர் 1950 ஆம் ஆண்டு வரை 25 ஆண்டுகளில் இந்திய அரசியல் வளர்ச்சிப்போக்கில் ஏற்பட்ட சூழல்களாலும், ஆபத்தான வரட்டு தத்துவவாத, திரிபுவாத தவறுகளாலும் கட்சி பல்வேறு சோதனைகளுக்குட்பட்டு மிகப்பெரும் பின்னடைவைச் சந்தித்தது. இந்த சோதனைகளும், பின்னடைவுகளும் கட்சிக்கு சரியான பாடத்தை புகட்டின. கட்சியின் அறிவார்ந்த தலைவர்களின் விடாமுயற்சியால் கட்சியின் சரியான திட்டமும், அறிக்கையும் 1951 ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்பு மாநாட்டில் முன்வைத்து நிறைவேற்றப்பட்டது. இதன் காரணமாக கட்சியின் அமைப்பு நிலையில் ஒற்றுமை நிலைநாட்டப்பட்டது. கட்சி அணிகள் மக்கள் மத்தியில் சரியான முறையில் செயல்பட்டன. நேச அணிகளுடன் சேர்ந்து தெளிவான அரசியல் போராட்டங்களை நடத்தின.

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மிகப்பெரும் வெற்றியைப் பெற்றது. நாடாளுமன்றத்திலும், மகாண சட்டமன்றங்களிலும் பிரதான எதிர்கட்சியாக இருந்து செயல்பட்டது. தெலுங்கான போராட்ட வீரர் தோழர் ரவி நாராயண ரெட்டி இந்தியாவிலேயே (நேருவை விட) அதிக வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். உலகம் முழுவதும் இந்த செய்தி பிரபலமானது.

சென்னை மாகாணத்தில் ஆந்திரப்பகுதியில் 42 இடங்களிலும், தமிழக பகுதிகளில் 13 இடங்களிலும், மலபார் (கேரளா) பகுதியில் 8 இடங்களிலும் என மொத்தம் 63 இடங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிபெற்றது.

மேலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஐக்கிய முன்னணி என்று கூட்டணி அமைத்து போட்டியிட்டதில் கூட்டணி கட்சிகளும் சேர்த்து மொத்தம் 167 இடங்களில் வெற்றிபெற்றன. சென்னை மாகாணத்தில் ஆட்சி அமைக்கும் வாய்ப்பும் ஏற்பட்டது.

ஆனால், அன்றைய ஒன்றியத்தை ஆண்ட காங்கிரஸ் கட்சியால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ஸ்ரீபிரகாசா 158 இடங்களில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியை அதன் தலைவரான ராஜாஜியை ஆட்சி அமைக்க அழைத்து ஜனநாயக படுகொலையை செய்தார். அன்று தொடங்கிய ஆளுநர்களின் அத்துமீறல்கள் இன்றுவரை தொடர்கிறது.

தேர்தலில் போட்டியிடாத ராஜாஜியை ஆளுநர் ஸ்ரீபிரகாசா மேலவை உறுப்பினராக நியமித்தார். ராஜாஜி காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற தலைவராக்கப்பட்டு மாநில முதலமைச்சரானார். பெரும்பான்மை இல்லாத ராஜாஜி தன் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள ஐக்கிய முன்னணி கூட்டணியில் இருந்த உழைப்பாளர் கட்சித்தலைவருக்கும் காமன்வீல் கட்சி தலைவருக்கும் அமைச்சர் பதவி கொடுத்து சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்றார்.

ஜனநாயக விரோதமாக நடந்து கொண்ட சென்னை மாகாண ஆளுநர் ஸ்ரீபிரகாசா அவர்களையும் குறுக்கு வழியில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ராஜாஜி அமைச்சரவையையும் கண்டித்து 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் தேதி சென்னையின் பிரதான வீதிகளில் கண்டன முழக்கங்களோடு ஊலர்வலங்களும், திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இலட்சக்கணக்கானோர் பங்கேற்ற அந்தப் பொதுக்கூட்டத்தில் தொழிற்சங்கத் தந்தை சர்க்கரை செட்டியார், ஐக்கிய முன்னணியின் தலைவர் ஆந்திர கேசரி டி.பிரகாசம், சி.பா.ஆதித்தனார், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றக்குழு தலைவர் தோழர் பி.ராமமூர்த்தி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

இதேபோல் தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் இந்தக் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. பல லட்சக்கணக்கான மக்கள் இந்த கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

1952 ஆம் ஆண்டு முதன் முதலாக ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநரைக் கண்டித்து இந்தியாவில் முதன் முதலாக போராட்டத்தை நடத்திய கட்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியாகும். தற்போது, தமிழ்நாட்டில் அரசியல் சாசனத்திற்கு விரோதமாகவும், தமிழ்நாட்டு மக்களின் நலன்களுக்குப் பாதகமாகவும் செயல்பட்டுவரும் ஆளுநர் ஆர்.என்.ரவியை ஒன்றிய அரசு திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்தி, வருகிற 29.12.2022 ஆம் தேதி ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்துகிறது.

இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் கலந்து கொள்ள வாருங்கள் என அறைகூவி அழைக்கின்றோம்.

அனைவரும் வருக...

தொடர்புக்கு: 9442736668

# ஜனநாயகத்தை காப்பாற்ற அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்

## இரா.முத்தரசன் பேட்டி

ஜனநாயகத்தை காப்பாற்ற அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து செயல்பட்ட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரிமாவட்டக்குழு கூட்டம் தருமபுரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் தருமபுரிக்கு வருகை தந்தார்.

முன்னதாக செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது 2ஜி மாநாட்டை தலைமை தாங்கி நடத்த இந்தியாவுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இது இந்தியாவுக்கு கிடைத்த பெருமை. இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

இந்த மாநாட்டை ஆக்கப்பூர்வமாக நடத்த ஒன்றிய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அனைத்துமாநிலமுதல்வர்கள்,எதிர்கட்சி தலைவர்களை அழைத்து ஒன்றிய அரசு கூட்டம் நடத்தியது வரவேற்கத்தக்கது. நமது மாநில முதல்வருக்கு ஒன்றிய அரசின் மீது பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு பல்வேறு கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

**இவைகளை எல்லாம் ஒன்றிய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.அதே நேரத்தில் இந்த ஜி20 மாநாட்டை ஒன்றிய பிஜேபி அரசு அரசியல் ஆதாயமாக்குவது கண்டனத்துக்குரியது.இந்த 2ஜி மாநாடு கொடியில் பாஜகவின் தேர்தல் சின்னமான தாமரை சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.**

ஏன் இது பிரதமர் மோடிக்கு தெரியாதா? மோடி அரசியல் செய்து வருகிறார்.

இதனை பல அரசியல் கட்சிகள் கண்டித்தும்,எதிர்த்தும், இந்த சின்னத்தை எடுக்கவில்லை பிஜேபி, ஒன்றிய மோடி அரசு எல்லாவற்றையும் அரசியல் ஆதயமாக்குவது, ஏற்புடையதல்ல கண்டனத்துக்குரியது.உடனடியாக இந்த சின்னத்தை விலக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் துவங்கியுள்ளது. இது ஜனநாயக முறையில் ஆக்கப்பூர்வமாக நடைபெறவேண்டும்.

எதிர்கட்சிகளுக்கு பேச வாய்ப்பு அளிக்க வேண்டும். மக்கள் பிரச்சனை குறித்து விவாதிக்க வேண்டும்.பண மதிப்பிழப்பு செய்து கறுப்பு பணத்தை மீட்பேன் என்றார்.ஆனால் கறுப்பு பணம் எதுவும் மீட்கபடவில்லை. இதனால் அனைத்து தரப்பு மக்களும் மிகவும் பாதிக்கப்பட்டனர். கொரோனா பெருந்தொற்றால் உலகமே முடங்கியது.





இதனால் சிறு,குறு தொழில் செய்பவர்கள் தொழிற்சாலைகளை மூடிவிட்டனர். இதனை மீட்க ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.ஒன்றிய அரசு தன்னிச்சையாக, அவசரமாக விவசாயிகளுக்கு எதிராக மூன்று வேளாண் சட்டங்களை இயற்றியது.பின்னர் விவசாயிகள் நடத்திய போராட்டத்தால் வாபஸ் பெற்றது.விவசாயிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்படி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

தேர்தல் ஆணைய தலைவர் நியமனம் குறித்து உச்ச நீதிமன்றம் எழுப்பியுள்ள கேள்வி சாதாரணமானது அல்ல. தற்போது தலைமை தேர்தல் ஆணையாராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர். ஒய்வு பெற்ற 24 மணி நேரத்தில் ஒன்றிய அரசு நியமித்து இருப்பது ஆளும் கட்சிக்கு சாதகமாக செயல்பட ஆணையரா என உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.ஏன் இந்த அவசரம் என உச்சநீதிமன்றம் கேள்வி கேட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் என்பது ஒரு தனிப்பட்ட நபரால் அமைக்கப்படுகின்ற அமைப்பு அல்ல, மக்களுக்கு என்ன தேவையே அரசியலமைப்பு சட்டத்திற்க்கு உட்பட்டு அமைக்கப்பட்டது, தேர்தல் ஆணையம் ரிசர்வ்பேங்க், நீதிமன்றம், ஆகியவை அரசியலமைப்பு சட்டத்தின்படி உருவாக்கப்பட்டவை.

இதுகுறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும். தற்போது இருக்கும் தேர்தல் ஆணையம் பிஜேபி அரசின் கைபாவையாக செயல்படுகிறது.

ஒரு மாநில தேர்தலை இரண்டு கட்டமாக நடத்தலாமா என பிஜேபி கட்சியிடம் தேதி கேட்பது ஜனநாயகத்திற்கு ஆபத்தானது.

நம்முடைய நாடு,நாட்டு மக்கள் ஜனநாயக முறையை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்

அந்த முறையில் தான் மக்கள் விரும்புகிற கட்சியை தேர்ந்தெடுக்கிறார்கள். ஒன்றிய அரசின் இத்தகைய செயல்பாடு நாடாளுமன்றத்திற்கும் ஜனநாயகத்திற்க்கும் ஏற்படையதல்ல.

இது மிகப்பெரிய ஆபத்தை உருவாக்கும்.ஜனநாயகத்தை காப்பாற்ற அனைத்துகட்சிகளும் ஒருங்கிணைந்து செயல்பட்ட வேண்டும்.

நம்முடைய துணை குடியரசு தலைவரை பாராட்டி சென்னையில் விழா நடத்தப்பட்டது. அதில் வெங்கையாநாயுடு பேசும் போது, எந்த மொழியையும் திணிக்க கூடாது. இதனை நான் ஏற்கமாட்டேன் என தெரிவித்துள்ளார். இதை வெங்கைய்யாநாயுடு பல முறை பேசியுள்ளார். ஆனால் காசி தமிழ்ச்சங்கம விழாவில், அமித்ஷா போன்றோர்கள் இந்தி பேசாத மாநிலங்களில், இந்தியை திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விழாவில் பேசிய பிரதமர் மோடி, தமிழுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என, தமிழை புகழ்ந்து பேசும் மோடியை வரவேற்கிறேன்.

ஆனால் கடந்த பாஜக ஆட்சியில், சமஸ்கிருதத்ததிற்கு ரூ 222 கோடி ஒதுக்கி விட்டு, தமிழுக்கு ரூ 22 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது உள்ளம் ஒன்று, உதடு ஒன்று பேசுவது போலாகும்.

தமிழக ஆளுநர் ரவி, ஆளுநர் மாளிகையை பாஜக அலுவலகமாக நடத்துகிறார். இங்கு போட்டி அரசாங்கம் நடத்தி வருகிறார். அரசியல் சாசனத்தின் படி செயல்பட வேண்டிய ஆளுநர், தமிழக அரசு கொடுக்கின்ற மசோதாக்களை செயல்படுத்தவில்லை. பிரதமர் தமிழகம் வந்த போது பாதுகாப்பில் குறைபாடு உள்ளதாக கூறி விளக்கம் கேட்டு தலைமை செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

ஆனால் பிரதமர், குடியரசு தலைவர்கள் பாதுகாப்பு என்பது மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு உட்பட்டது. ஆனால் பிரதமர் வரும்போது தமிழக அரசு உரிய பாதுகாப்பு கொடுக்கவில்லை என பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவிக்கிறார். இதை ஒன்றிய அமைச்சர் அமித்ஷா விடம் தான் கேட்க வேண்டும். ஆனால் ஆளுநரிடம், அண்ணாமலை கொடுக்கும் புகார் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க முயற்சிக்கிறார்.

தமிழக ஆளுநர் ரவி அரசியல் அமைப்பு சட்டத்திற்கு விரோதமாக செயல்பட்டு வருகிறார். நம் நாடு எந்த மதத்தையும் சார்ந்தது அல்ல.உலகமே போற்றுகிற மதசார்பற்ற நாடு, எல்லா மதத்தினரும் இந்தியாவில் இருக்கலாம். இது ஒரு மதம் சார்ந்த நாடு அல்ல இது அரசியல் அமைப்பு சட்டம் சொல்கிறது. அரசியல் அமைப்பு சட்டம் தான் நாட்டை வழிநடத்துகிறது.

ஆனால் ஆளுநர் என்ன சொல்கிறார் என்றால் உலகத்தில் உள்ள நாடுகள் ஒரு மதத்தை சார்ந்து இருக்கிறது என சொல்கின்றார்.கிறிஸ்டீன் நாடு எப்படி இருக்கிறதோ, அதே போன்று இந்திய நாடு இந்து நாடு என்கிறார். சனாதனம் தான் வழிநடத்துகிறது என்ற அபத்தமான செய்தியை தெரிவிக்கிறார்.தேசிய கல்வி கொள்கையை தமிழக அரசு எதிர்க்கிறது.

ஆனால் அதுதான்சிறந்த கொள்கை என்கிறார் ஆளுநர்.தமிழக சட்ட பேரவையில் ஆன்லைன் சூதாட்ட தடை உள்ளிட்ட 20 மேற்பட்ட மசோதாக்கள் ஆளுநருக்கு அனுப்பப்பட்டது மக்கள் நலனுக்காக மசோதா நிறைவேற்றபடுகிறது, ஆனால் ஆளுநர் கையெழுத்திட மறுக்கிறார்.

**6 பேர் விடுதலையில் கையெழுத்திடாமல், உச்சநீதிமன்றம் தலையிட்டு 6 பேரை விடுதலை செய்தது. அப்போதே ஆளுநர் ராஜினாமா செய்திருக்க வேண்டும்.**

மேலும் ஆளுநர் போட்டி அரசாங்கம் நடத்தி வருகிறார்.ஒன்றிய அரசு ஆளுநரை திரும்ப பெற வேண்டும். ஆளுநர் ரவியின் செயல்பாடு ஏற்புடையதல்ல. வருகிற டிசம்பர் 29ம், தேதி ஒன்றிய அரசு ஆளுநரை திரும்ப பெற வலியுறுத்தி,மக்களை திரட்டி கவர்னர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடத்தப்படும் என தெரிவித்தார்.

பேட்டியின் போது மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ந.நஞ்சப்பன், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம், மாநிலக்குழு உறுப்பினர்கள் கா.சி.தமிழ்க் குமரன், கமலாமூர்த்தி, அரூர் நகர செயலாளர் ப.முருகன்,வட்டார செயலாளர் கள் நல்லம்பள்ளி பிரசாத், அரூர் சிற்றரசு ஆகியோர் உடனிருந்தனர்.

# போக்குவரத்து கழகங்களில் காலிப் பணியிடங்களை நிரப்புக!

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஏஐடியூசி தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பப்பட வேண்டும், ஒய்வூதியர் அகவலைப்படி உயர்வு வழக்கில் நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்த வேண்டும், அரசு மேல்முறையீடு செய்துள்ளதை திரும்பப் பெற வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் ஜெபமாலைபுரம் தஞ்சாவூர் நகர் கிளை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கும்பகோணம் அரசு போக்குவரத்து ஏஐடியூசி மத்திய சங்கத் தலைவர் என்.சேகர் தலைமை வகித்தார். ஒய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாதுரை, தொழிலாளர்கள் சங்க பொதுச்செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏஐடியூசி மாநில செயலாளர் ஆர். தில்லைவனம் தர்ணா போராட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். சம்மேளன துணைத்தலைவர் துரை. மதிவாணன் கோரிக்கைகளை வலியுறுத்தி சிறப்புரையாற்றினார்.

# தோழர் மொய்ரங்க்தம் இபோஹால் மறைவு

'எம்.ஐ' என்றழைக்கப்படும் மணிப்பூர் மாநில மேனாள் சிபிஐ மாநிலச் செயலாளர் மொய்ரங்க்தம் இபோஹால் அக்டோபர் 3ம் தேதி தமது 100வது வயதில் மணிபூர் கிழக்கில் உள்ள அவரது வீட்டில் இயற்கை எய்தினார்.

ஸ்ரீமொய்ரங்க்தம் கிருஷ்ணா சிங் மற்றும் ராஜ்குமாரி கெயின்யாசனா தேவிக்கும் மூத்த மகனாக 1922 டிசம்பர் 22ல் பிறந்தார்.

1948 ஆகஸ்ட் 23ல் இம்பாலில் அமைக்கப்பட்ட மணிப்பூர் சிபிஐ மாவட்ட அமைப்புக் குழு உறுப்பினர்களில் அவரும்ஒருவர். அதே ஆண்டு செப்டம்பர் 21ல் "புங்க்டோங்பாம் நிகழ்வு" காரணமாக மணிப்பூர் சிபிஐ தலைமறைவாகச் செயல்படத் தொடங்கியது. அரசுப் படைகளால் சிறைபிடிக்கப்பட்ட அவருக்கு 24 ஆண்டுகள் மணிப்பூர் (கம்யூனிஸ்ட்) சதி வழக்கு, 1951ன் கீழ் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இந்திய அரசால் தண்டனைக் காலம் 7 ஆண்டாகக் குறைக்கப்பட்டு மேற்கு வங்க அலிப்பூர் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

1967ல் டெரிடோரியல் சட்டமன்றத் தேர்தல்களில் சங்கோல்மாங் தொகுதியிலிருந்து போட்டியிட்டு வென்றார். 1967–68 காலத்திலும் பிறகு மீண்டும் 1978 முதல் 1989 வரையிலும் மணிப்பூர் மாநில சிபிஐ செயலாளராகப் பொறுப்பு வகித்தார். சிபிஐ தேசியக் குழு உறுப்பினராக 1982 முதல் 1989வரை இருந்தார்.

மறைந்த தோழர் மொய்ரங்க்தம் இபோஹால் அவர்களுக்குச் செவ்வணக்கம்!

# பொது சிவில் சட்டமும் - புரட்டும்



- த.லெனின்

**ஹிட்லரின் கோயபல்ஸ் ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் சொன்னால் அது உண்மையாகும் என்று கூறினார். இன்றோ நவீன அறிவியல் தொழில்நுட்ப புரட்சி வளர்ந்துள்ள காலம். எனவே, ஆர்எஸ்எஸ் – பாஜகவும், மோடியின் பக்தர்களும் தங்களது தகவல் தொழில்நுட்ப அணியைப் பயன்படுத்தி பொய் செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.**

இவை சமூக ஊடகங்களிலும், இணையதளங்களிலும் வதந்திகளாக பரப்பப்பட்டு உண்மையான கருத்துக்கள் என்பது போல இன்று உலா வருகின்றன.

அந்த வகையில்தான் பொது சிவில் சட்டம் இப்போது பேசப்படுகிறது! ஏற்கனவே கொண்டுவரப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டம், காஷ்மீருக்கான சிறப்புப் பிரிவு 370 நீக்கம் என பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்து இஸ்லாமிய மக்களை அச்சுறுத்தி வருகிறது பாஜக அரசு!

பொது சிவில் சட்டத்தை அரசு கொண்டு வராததைப் போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்த, கடந்த டிசம்பர் 9ஆம் தேதி, மாநிலங்களவை குளிர்கால கூட்டத் தொடரில் பாஜகவின் நாடாளுமன்ற உறுப்பினர் கிரோடி லால் மீனா ஒரு தனிநபர் தீர்மானம் மூலம், பொது சிவில் சட்டம் அமைப்பதற்கான ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்ற மசோதாவை தாக்கல் செய்தார்.

இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, சிபிஎம், திமுக, சமாஜ்வாடி, திரிணாமுல், மதிமுக, ராஷ்ட்ரிய ஜனதா தள் உட்பட பல கட்சிகள் எதிர்த்தன.

அவைத் தலைவர் ஜெகதீப் தன்கர் இதற்கான வாக்கெடுப்பை நடத்தினார். தீர்மானத்திற்கு ஆதரவாக 63 வாக்குகளும், எதிராக 23 வாக்குகளும் பதிவாகி நடப்பு கூட்டத்தொடரில் இது விவாதிக்கப்படவும் உள்ளது.

பொது சிவில் சட்டம் கடந்த 1947 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 அன்று, அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் குறித்து ஆராய ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டது. அதன் உறுப்பினர்களில் ஒருவரான எம்.ஆர். மசானி திடீரென பொது சிவில் சட்டம் பற்றிய ஒரு முன்மொழிவை அங்கே கொண்டு வந்தார். இதனை மற்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்தனர். எனவே அது அப்போது கைவிடப்பட்டது.

மீண்டும் இது குறித்த விவாதம் வந்தபோதுதான் வழிகாட்டும் நெறிமுறைகளில் இதனை வைத்துக் கொள்ளலாம் என முடிவெடுத்தனர். இதுதான் பொது சிவில் சட்டம் குறித்த உண்மையான வரலாறு ஆகும்.

இந்தியாவில் பலமொழிகள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், கட்டமைப்புகள் உள்ளன. வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்த சிறப்பு அம்சங்கள் நமது நாட்டில் காலம் காலமாக நின்று நிலவுகிற ஒன்றாகும். ஆனால், இம்முறைக்கு வேட்டு வைக்கும் முயற்சியாக இந்து ராஷ்டிரம் அமைக்கும் இந்துத்துவக் கோட்பாட்டாளர்கள்தான், தொடர்ந்து “ஒரே நாடு, ஒரே சட்டம்“ என்கிற முழக்கத்தை முன் வைக்கிறார்கள்!

இந்தியா முழுவதும் ஒரே குற்றவியல் சட்டம் தான் நடைமுறையில் உள்ளது. ஆனால், திருமணம், மணமுறிவு, ஜீவனாம்சம், வாரிசுரிமை, சொத்துரிமை, பரம்பரைச் சொத்தை பங்கீடு செய்யும் முறை, குழந்தைகளை தத்தெடுத்தல் போன்றவற்றிற்கு மட்டும் சமயம் சார்ந்த தனிநபர் சிவில் சட்டங்கள் இன்று இந்தியாவில் அமலில் உள்ளன.

நமது பன்மைத்துவத்தை கருத்தில் கொண்டு, இஸ்லாமியர்களுக்கு ஷிரியத் சட்டத்தின் அடிப்படையிலும், இந்துக்களுக்கு வேதங்கள் மற்றும் அவர்களது பழக்க வழக்க நடைமுறைகள் அடிப்படையிலும், கிறிஸ்தவர்களுக்கு அவர்களது மத அடிப்படையிலான சட்டங்களின் வழியிலும் உள்ளன. ஏன் சீக்கிய மதத்திற்கென்று தனி சிவில் சட்டம் கடந்த 2012 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு நடைமுறையில் உள்ளது.

அதுவும் பழங்குடிகள் அதிகம் உள்ள நமது நாட்டில் அவர்களது திருமண, சொத்துரிமை, வாரிசுரிமை கூட வித்தியாசமானதுதான். ஏன், இந்து மதத்திலேயே கூட ஒரே மாதிரியான சிவில் சட்டம் இல்லை. சாதிக்கு ஒரு சிவில் சட்ட நடைமுறை, திருமணம், மண முறிவு, ஜீவனாம்சம் உட்பட அனைத்திலும் பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. உண்மையில், பொது சிவில் சட்டத்திற்கு குரல் எழுப்பக் கூடியவர்கள் பொது இந்துச் சட்டத்தை கொண்டுவர ஏன் முயலவில்லை?

ஏனென்றால் அது அவர்களுக்கு தெரியும். அப்படி ஒரு நிலையை எடுத்தால், நிச்சயம் அது அவர்களுக்கு எதிராகத்தான் போய் முடியும். எனவேதான் வெறுப்பு அரசியலை விதைப்பதையே தங்களது தொடர் நிகழ்ச்சியாக கொண்டுள்ள பாசிச ஆர்எஸ்எஸ் – பாஜகவும் சிறுபான்மையினருக்கு எதிராக, அதிலும் குறிப்பாக இஸ்லாமியர்களுக்கு எதிராக தனது செயல்பாட்டை துரித்தப்படுத்தவும், அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் முயற்சியாகத் தான் இந்தச் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன.

பெண்ணுரிமை குறித்து பேசும் இவர்கள்தான் இதுவரை இந்து பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டத்தை கொண்டு வராமல் இருக்கிறார்கள். அதுபோலவே பெண்களுக்காக நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் 33% இட ஒதுக்கீடு கொண்டுவர இவர்களது ஆட்சிக் காலத்தில் எந்த முன்முயற்சியும் எடுக்கவில்லை. இன்று தமிழ்நாட்டிலும், மேற்கு வங்கத்திலும் மட்டும்தான் பெண்களுக்காக சொத்துரிமை சட்டம் உள்ளது.

நம்முடைய கேள்வி, இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் தங்களது மதத்தை ஒழுகவும், பரப்பவும், விரும்பிய மதத்தில் சேரவும் உள்ள உரிமையை இந்திய அரசமைப்புச் சட்ட பிரிவு 25 (ஏ) வழங்கியுள்ள அந்த உரிமையை இது பாதிக்காதா என்பதுதான்?

திடீரென இஸ்லாமிய பெண்கள் மீது ஏன் இந்த கரிசனம். முத்தலாக் சட்டத்தை கொண்டு வந்தார்கள். அதனால் என்ன பலனை இந்த நாடு கண்டது?

அரசமைப்புச் சட்டத்தின் வழிகாட்டும் நெறிமுறைகளில் பிரிவு 44 பொது சிவில் சட்டம் குறித்து பேசுகிறது. எனவேதான் அதை நாங்கள் சட்டமாக கொண்டு வரப்போகிறோம் என்று திருவாய் மலர்ந்துள்ளார்கள்! ஆனால் உண்மை என்ன?

அதே சரத்தில், சம வேலைக்கு சம ஊதியம், பிரிவு 40 கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பெறுகிற உரிமைகளையும், பிரிவு 45 குழந்தைகளுக்கான பாதுகாப்பு மற்றும் கல்வி அடிப்படை உரிமையாக அங்கீகரிக்க வேண்டும் என்று கூறியுள்ளதுடன், பிரிவு 47 கேடு விளைவிக்கும் மதுவை தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறது. பிரிவு 48 (ஏ) நம்முடைய சுற்றுச் சூழலை, வன விலங்குகளை பாதுகாக்க வேண்டும் என கூறுகிறது.

பிரிவு 49 வரலாற்று பழமையான நம்முடைய கட்டடங்கள், இடங்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் போன்றவற்றை பாதுகாக்க வேண்டும் என்று கூறியுள்ளது. ஆனால், இவர்கள் தான் 450 ஆண்டுகால பழமையான பாபர் மசூதியை இடித்து, அந்த இடத்திலேயே ராமர் கோயிலையும் கட்டி வருகின்றனர்.

இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்த எந்த முயற்சிகளையும் எடுக்காத பாஜக, பொது சிவில் சட்டத்தை மட்டும் கட்டாயமாக்க முயல்வது ஏன்?

சரி, பொது சிவில் சட்டம் வந்துவிட்டால் எல்லாம் சரியாகி விடுமா? ஒவ்வொரு மதத்திலும் மதச் சட்டங்களில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. அவற்றில் திருத்தப்பட வேண்டிய அம்சங்களும் இருக்கின்றன. அதனை திருத்த வேண்டுமே ஒழிய, அதற்கான தீர்வாக பொது சிவில் சட்டத்தை கொண்டு வருவது என்பது ஏற்புடையதல்ல.

ஏனென்றால் எந்த மதத்தைச் சார்ந்தவர்களும், பழங்குடியினரும் அவர்களது பழக்க, வழக்கங்களை பாதுகாத்துக் கொள்கிற உரிமையும் இருக்கிறது. பொதுவான அம்சங்களை சீர்திருத்துகிற போது அந்தந்த மதங்களுக்குள் நின்றே சட்டங்களையும், முறைகளையும் மாற்றி அமைக்க வேண்டும்.

உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் இதே பொது சிவில் சட்டம் ஏற்கனவே கோவாவில் அமுலில் உள்ளது. ஆனால், திருமணமான பெண்கள் 25 வயதிற்குள் குழந்தை பிறக்கவில்லை என்றால், அதனை காரணம் காட்டி விவாகரத்து செய்யலாம் என்று ஒரு விசித்திர முறை உள்ளது. என்னே முற்போக்கு சட்டம் இது!

பொது சிவில் சட்டத்திற்கு ஆதரவாக இன்னொரு கேள்வி முன்வைக்கப்படுகிறது. பலதார மணம் இஸ்லாமியர்களின் அதிகமாக இருக்கிறது. ஒரு இஸ்லாமிய ஆண் நான்கு பெண்களை திருமணம் செய்து கொள்ளலாம் என்று ஷரியத்திலே கூறப்பட்டு இருக்கிறது. இந்து மதத்தில் அப்படி இல்லை. எனவே பெண்களின் நலனுக்காகதான் இந்த பொது சிவில் சட்டத்தை கொண்டு வருகிறோம் என்று கூறுகிறார்கள்.

ஆனால் உண்மை என்ன? கடந்த 1951 இருந்து 1960 வரை எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளில் 23.58 % பலதார மணம் இந்துக்களிலும், இஸ்லாமியர்களில் 4.3% பலதார மணமும் இருப்பதாக அறியப்பட்டது.

போகிற போக்கில் டாக்டர் அம்பேத்கர் பொது சிவில் சட்டத்தை கொண்டு வருவதற்காக முயற்சித்தார் என்ற ஒரு கட்டுக் கதையை ஆர்.எஸ்.எஸ். பரப்பி வருகிறது. அதைத்தான் ஒன்றிய அமைச்சர்களில் இருந்து உள்ளூரில் செயல்படும் பாஜக சங்கப் பரிவார தலைவர்கள்வரை தொடர்ந்து பரப்பி வருகின்றனர்.

ஆனால் உண்மை என்ன? ஒரு தாரமணம், ஜீவனாம்சம், பெண்கள் சொத்துரிமை, வாரிசு சட்டத் திருத்தம் போன்ற சில திருத்தங்கள் உள்ளடக்கிய இந்து சட்ட திருத்த மசோதாவை 1951இல் அன்றைய நாடாளுமன்றத்தில் டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந்தார்.

காங்கிரசில் இருந்த பழமைவாதிகளும், இந்து மகாசபையினரும், சனாதனிகளும் ஒன்று கூடி சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் இதனை கடுமையாக எதிர்த்தனர். ஆனால் எதிர்த்தவர்கள் அனைவரும் ஒரே குரலில் பொது சிவில் சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று பேசினர்.

டாக்டர் அம்பேத்கர் இந்த சட்ட மசோதாவை எதிர்ப்பவர்கள் ஒரே நாளில் பொது சிவில் சட்டத்திற்கு தீவிர ஆதரவாளராக மாறிவிட்டது எனக்கு வியப்பளிக்கிறது என்று, அவர்களது இரட்டை நிலைபாட்டை அன்றே தோலுரித்துக் காட்டினார்.


ஜவர்கலால் நேருவும் சனாதனிகள் எதிர்ப்பினை உணர்ந்து சட்டத்தை கொண்டுவர பின் வாங்கினார். அதனால்தான் டாக்டர் அம்பேத்கர், தனது சட்ட அமைச்சர் பதவியினையே ராஜினாமா செய்தார் என்பது வரலாறு! அத்துடன் “நான் இந்துவாக பிறந்தது என் கையில் இல்லை. ஆனால், நான் இறக்கும்போது இந்துவாக சாக மாட்டேன்” என்று பௌத்த மதத்திற்கு மாறிய அம்பேத்கர், பௌத்த மதத்திற்கென்று தனி சிவில் சட்டம் வேண்டும் என்று கோரிக்கையையும் வைத்தார்.

ஆனால், பொது சிவில் சட்டத்தை அம்பேத்கர் ஆதரித்தார் என்று கெட்டிக்காரத்தனமாக ஒரு புளுகு மூட்டையை இன்றைய பாஜகவினர் பொதுவெளியில் அள்ளி வீசி வருகின்றனர்.

சரி, நிலைமை இப்படி இருக்க, சங்கிகளின் குரு கோல்வால்கரின் கருத்துதான் என்ன?

1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 தேதி தீனதயாள் உபத்தியாயா ஆராய்ச்சி கழகத்தை தொடங்கி வைத்து உரையாற்றிய போது, “பாரத ஒற்றுமையை பாதுகாக்க பொது சிவில் சட்டம் தான் கருவியாகும் என்பது தவறு, இயற்கைக்கு எதிரானது. இது விபரீத விளைவுகளை உண்டாக்கும்“ என்று பேசியுள்ளது குறித்து இந்த கதையளக்கும் கோமான்கள் என்ன கூறுவார்கள்! ஆணவப் படுகொலைகளை தடுக்கச் சட்டமில்லை. சாதிப் பஞ்சாயத்துகள் நிறுத்தப்படவில்லை. தீண்டாமை ஒழிக்கப்படவில்லை. இது குறித்து இவர்கள் சிந்தித்தது உண்டா?

மக்களின் உண்மையான பிரச்சினைகளான விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், தனியார் மயமாக்கல், போன்றவற்றிலிருந்து திசை திருப்பவும், வெறுப்பு அரசியலைப் பரப்பி குறுக்கு வழியில் வாக்கு அறுவடை செய்யவும் இதுபோன்ற திடீர் சட்ட முன்வடிவுகளை கொண்டுவருவது பாசிசவாதிகளின் கடந்த கால வரலாற்றை அடியொற்றியே செயல்படுவதாகும். பா.ஜ.க.வும் மோடியும் விதிவிலக்கா என்ன?




தொடர்புக்கு: 94444 81703

# இறையாண்மை, சமத்துவ ஆகிய கொள்கைகளுக்கு ந

## ஹனாய் சமாதானக் கூட்டத்தில் ஆனி ராஜா முழக்கம்

**நவம்பர் 25ல் வியத்நாம் நாட்டின் ஹனாய் நகரில் உலகச் சமாதானக் குழு சார்பில் நடைபெற்ற, சர்வதேச மாநாட்டில் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளரும், பெண்கள் சர்வதேச ஜனநாயக சம்மேளனத்தின் உதவித் தலைவருமான ஆனி ராஜா ஆற்றிய உரை வருமாறு:**

“பெண்கள் சர்வதேச ஜனநாயக சம்மேளனத்தின் (WIDF) சார்பாக அனைவருக்கும் எனது புரட்சிகர வாழ்த்துகள். வியத்நாம் வீரம் செறிந்த வெற்றிகரமான தேசம், உலகம் முழுவதுமுள்ள மக்களுக்கான அதன் ஆழமான உறுதிப்பாடு மற்றும் 1975ல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்க அதன் வீரம் செறிந்த போராட்டங்களுக்காக மட்டுமின்றி, நாட்டு மக்கள் தம் குழந்தைகளைச் சுதந்திரமாகவும், சமாதானத்திலும் வளர்க்கச் செய்ததற்காக அனைவரும் வியத்நாம் குறித்துப் பெருமிதம் கொள்கிறோம்.

சம்மேளனம் நிறுவியது முதல் சமாதானத்திற்கான நமது போராட்டம் தொடர்நிகழ்வானது. இச்சம்மேளனத்தின் முன்னோர்கள் இங்கே ஆசியாவில், வியத்நாமிய பெண்களுக்குத் தங்களின் ஆகச் சிறந்த ஆதரவை அர்ப்பணித்தனர்; “ஏஜென்ட் ஆரஞ்சு” ஏற்படுத்திய விளைவுகளை ஏற்க மறுத்து நடத்திய போராட்டங்களுக்குத் தொடர்ச்சியான ஆதரவை அளித்தோம்.

### இன்றைய காலகட்டத்தில் கூட்டத்தின் முக்கியத்துவம்

அபாயகரமான உலக, தேசிய மற்றும் உள்ளூர் நிலைமைகளின் பின்னணியில் இத்தகைய கூட்டம் மிக முக்கியமானது. சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்திற்காகப் போராட நமது உறுதியை இங்கே பிரகடனம் செய்வோம். செல்வாதாரங்களைப் பகிர்தல், உணவு, உடை, வசிப்பிடம், கல்வி மற்றும் வீட்டு வசதி போன்ற அடிப்படை தேவைகள் கிடைப்பது என்பதன் அடிப்படையில் உலகம் மேலும் சமமற்றதாக உள்ளது. போர்க்கால ஆண்டுகளில் மனித குலம் பஞ்சங்கள், பெரும் நோய் தொற்றுகள் எனப் பல்வேறு இன்னல்களைச் சந்தித்ததை நாம் நினைவு கொள்வோம்.

தற்போதைய சகாப்தத்தில் அத்தகைய பேரழிவை ஏற்படுத்தும் பருவநிலை அவசர நிலையானது ஏற்கனவே பிரச்சனைகளால் அல்லாடும் உலகில், செங்குத்து மலையில் ஏறுவது போல, இன்னும் கடுமையாக்குகிறது. இன்று மேலும் ஒன்றிணைக்கப்பட்ட உலகில், ரஷ்யாஉக்ரைன் போரின் காரணமாகக் கருங்கடல் பகுதியின் உக்ரைனிய, ஒடிசா துறைமுகத்தில் ஒரு சாதாரண முற்றுகை, பல பத்து லட்சம் ஆப்ரிக்கர்களைப் பட்டினியில் தள்ளிவிடும்.

போரும் பருவநிலை பாதிப்பும்

போரின் காரணமாக அத்தியாவசியப் பொருள் வழங்கல் சங்கிலித் தொடரில் தடை மற்றும் பருவநிலை அவசரநிலைகள் பல கோடி மக்களை எளிதில் பாதிப்படையச் செய்யும். அமேசான் காடுகளை எரிக்கவும், மரங்களை வெட்டவும் பிரேசிலின் அதிதீவிர வலதுசாரித் தலைவரான ஜெயிர் போல்சொனாரோ மௌனமாக அனுமதித்தபோது, உலகின் அனைத்து மூலைகளிலும் அதன் தாக்கத்தை உணர முடிந்தது.

உலக வெப்பமயமாதல் அதிகரிப்பின் காரணமாகக் கடுமையான வெள்ளம், வறட்சி மற்றும் கடும் மழைப் பொழிவுடன் லட்சோப லட்ச மக்கள் பருவநிலை பாதிப்பு அகதிகளாகின்றனர்.

மனிதக் குடியிருப்புகள் பல மேலும் மேலும் வாழத் தகுதியற்றதாகி மக்களைப் புலம் பெயரச் செய்கிறது. ஐரோப்பாவில் காட்டுத் தீ நிகழ்வுகள், வெப்ப அலை மற்றும் வறட்சி எப்போதையும்விட சாதாரண நிகழ்வாகி விட்டன; எதிர்பாராத திடீர் பருவ கால நிலைகள் வேளாண்மையை முன்பைவிட கடினமாக்கி உள்ளது. முன்பு எந்தச் சகாப்தத்தையும்விட நாம் இப்போது மேலும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தப்பட்டவர்களாக உள்ளோம். இத்தகைய உள் இணைப்புத் தொடர்பு நம்மை நம்பிகை கொள்ளவும் செய்கிறது, எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களாகவும் ஆக்கி உள்ளது.

ஏறத்தாழ அரை நூற்றாண்டாக ஒப்பீட்டளவில் அமைதி மற்றும் நிலைத்தன்மை நீடித்த பிறகு போர் அச்சுறுத்தல் மேலும் சூழ்கிறது. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என அதிகாரம் மிக்க அரசுகளும், பிரதேச சக்திகளும் தங்கள் விருப்பம்போல எல்லைகளை மாற்றி அமைக்க, பிற நாடுகளைக் கட்டாயப்படுத்த தன்னிச்சையான இராணுவ வல்லாண்மையைப் பயன்படுத்தினால், பின் சர்வதேச ஒழுங்கமைப்பு முறை வீழும். வலிமைமிக்க ஏகாதிபத்திய அரசுகள் சிறிய நாடுகளின் தேசிய உரிமைகளை அழிக்க முயற்சி செய்வதால், சர்வதேசச் சட்டங்கள் உண்மையாக நடைமுறைப் படுத்தப்படுவதில்லை.

அது பாலஸ்தீன சுய நிர்ணய உரிமை அல்லது ரஷ்ய உக்ரைன் போர்ப் பிரச்சனை எதுவானாலும் இந்தப் பெரியண்ணன் நாடுகள் எந்த வகையான கூட்டு எதிர்ப்பை மறித்துத் தடுக்கவும், அமைதியான தீர்வை ஏற்படுத்த கூட்டான முயற்சி உருவாவதைத் தடுக்கவும் செய்கின்றன. அதிகாரம் மிக்க நாடுகளின் அடாவடிப் போக்கு, வலிமை குறைந்த நாடுகளையும் இராணுவமயமாக்கி பிற கூட்டுப் பாதுகாப்புக் குழாம்களில் சேரச் செய்கிறது.




### இராணுவச் செலவு அதிகரிப்பும், பாதிப்பும்

2021ல் ஆகக் கூடுதலாக இராணுவத்திற்குச் செலவிட்ட ஐந்து பெரும் நாடுகள் அமெரிக்கா, சீனா, இந்தியா, பிரிட்டன் மற்றும் ரஷ்யா; இவை ஐந்தும் உலக மொத்த இராணுவச் செலவில் கூட்டாக 62 சதவீதம் செலவிட்டுள்ளன. 2021ல் உலகின் ஐந்து பிரதேசங்களில் மூன்றில் இராணுவச் செலவீனங்கள் அதிகரித்துள்ளன.

இன்றைய உலகின் ஏழ்மை, உணவு

# நீதி கேட்டு கரும்பு விவசாயிகள்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஆதரவு

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தஞ்சை மாவட்டம் பாபநாசம் ஒன்றியம், திருமங்களங்குடியில் உள்ள திருஆரூரான் சர்க்கரைஆலை முதலாளியின் மோசடியைக் கண்டித்து, கடந்த நவம்பர் 30 முதல் அந்த ஆலைக்கு கரும்பு கொடுத்து வந்த விவசாயிகள் செயல்படாது உள்ள அந்த ஆலையின் முன்னே தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதில் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாமு.தர்மராஜ், சிபிஐ மாவட்ட துணை செயலாளர் சி.செந்தில், ஒன்றிய செயலாளர் பி.சேகர், ஏ.ராஜேந்திரன், சக்ரவர்த்தி மற்றும் முன்னணி தோழர்களுடன் நேரில் சென்று போராட்டத்தில் பங்கு கொண்டு விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து பேசினார்.

இந்த கரும்பாலை உரிமையாளருக்கு இரண்டு ஆலைகள் உள்ளன. கரும்பு கொடுத்த ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு இந்த ஒரு ஆலை மட்டும் கொடுக்க வேண்டிய பாக்கி பணம் ரூ.85 கோடியை பல ஆண்டுகளாக கொடுக்காமல் ஏமாற்றியதுடன், விவசாயிகளின் நிலங்களை அடமானம் வைத்து வங்கிகளில் கரும்பு சாகுபடிக்காக பெற்ற ரூ.300கோடி கடன் தொகையையும் திருப்பி செலுத்தாது இவர் விவசாயிகளை ஏமாற்றியுள்ளார். வங்கிகள் விவசாயிகளுக்கு நோட்டீஸ் அனுப்பி நடவடிக்கை எடுத்து வருவதால் தனக்கு வரவேண்டிய



பணத்தையும் இழந்து, தொடர்ந்து இவர்கள் மனவேதனை அடைவதுடன் புதிய கடன்கள் பெற முடியாமலும் அவதிப்பட்டு வந்த நிலையில் தான் அவர்கள் அரசுக்கு தொடர்ந்து முறையிட்டு வந்துள்ளனர். ஆனால் இந்த ஆலை நிர்வாகியின் மீது உரிய நடவடிக்கையை கடந்த ஆட்சி எடுக்கவில்லை. அப்போது திமுகவின் வாக்குறுதியாக, அரசே இந்த ஆலையை ஏற்று நடத்தும் என்று அறிவித்ததை நம்பி விவசாயிகள் இருந்தனர்.

இந்நிலையில் இந்த ஆலையை ஹால்ஸ் என்ற தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்துவிட்டார். இதனால் விவசாயிகள் போராட்டத்தை தொடங்கி விட்டனர். இந்நிலையில் மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்த முத்தரப்பு பேச்சு வார்த்தையில், கரும்பு பணம் பாக்கி 57சதம் தொகை மட்டுமே கொடுக்க முடியும், அதையும் வரும்

# ம், சமூக நீதி, சமாதானம்
# ம்மை நாம் அர்ப்பணிப்போம்!

மற்றும் எரிபொருட்களின் விலைவாசி உயர்வு, பருவநிலை மாற்ற அதிர்ச்சிகள் மற்றும் உலகைப் பெரிதும் சூழ்ந்திடும் பொருளாதார வீழ்ச்சி போன்ற நிலைமைகளின் பின்னணியில், இத்தகைய இராணுவச் செலவு அதிகரிப்பது ஒரு தற்கொலை முயற்சியே. உலகப் பன்முக பரிமாண அளவீட்டு ஏழ்மைக் குறியீட்டின்படி, 111 நாடுகளில் 120கோடி மக்கள், பன்முக அளவீடுகளின்படி கடும் ஏழ்மையில் உள்ளனர். அவர்களில் பாதிக்கும் மேல் 18வயதிற்குக் குறைவான குழந்தைகள். தெற்காசியாவை அடுத்து ஆப்ரிக்காவில் மிக அதிக எண்ணிக்கையில் ஏழை மக்கள் வாழ்கிறார்கள்.

ஏழைகளில் ஏறத்தாழ பாதி மக்கள் தொகையினருக்கு (47 கோடி) சத்துணவு, சுகாதாரம் இரண்டுமே மறுக்கப்பட்டிருக்கிறது. மேலும் பாதிக்கும் மேற்பட்ட ஏழை மக்களுக்கு (59 கோடி) அதே நேரம் சமையல் எரிபொருள் மின்சாரமும் மறுக்கப்பட்டுள்ளது.

இவற்றோடுகூட அரசுகள் தொடர்ந்து சுகாதாரம், கல்வி, உணவு மற்றும் எரிபொருள் பாதுகாப்புப் போன்ற அடிப்படை பொதுத்துறை பிரிவுகளிலிருந்து விலகுவதன் காரணமாக, உலகின் பெரும்பான்மையான மக்கள் தொகையினர் பன்முகப் பரிமாணப் பாதிப்புக்களுக்கு ஆளாகின்றனர். அவற்றிலிருந்து அவர்களால் பாதுகாத்துக் கொள்ள இயலாது உள்ளனர். சந்தேகமில்லாமல் இவற்றின் கூட்டு பாதிப்பு, உலகின் பெரும்பான்மை நாடுகள் பின்பற்றும் புதிய தாராளமயப் பொருளாதாரக் கொள்கையின் விளைவே ஆகும்.

### இந்திய விவசாயிகள் போராட்டம்

இந்தியாவின் பெரும்பான்மையினவாத வலதுசாரி தீவிர போலி தேசியப்பற்று கட்சியான ஆளும் பாஜக, தனது இந்தியக் கார்ப்பரேட்டுகளுக்கு வேளாண்மைப் பிரிவை விற்பதன் மூலம் விவசாயிகளை அழிப்பது எனப் பிடிவாதம் பிடிக்கிறது. பெரும்பாலான இந்திய ஏழைகள் பொது விநியோக முறையை (ரேஷன் பிடிஎஸ்) சார்ந்துள்ளனர்; பிடிஎஸ் முறை, விவசாய உற்பத்திப் பொருட்களை உறுதியளிக்கப்பட்ட ஆதரவு விலையில் (எம்எஸ்பி), கொள்முதல் நிலையங்கள் மூலம், அரசு கொள்முதல் செய்வதால் நடைபெறுகிறது. ஆரோக்கியமான இத்திட்டம் குறைந்த பட்ச சமூகப் பாதுகாப்பு வளையத்தைப் பெரும்பான்மை இந்திய ஏழைகளுக்கு வழங்குகிறது. இந்திய விவசாயிகள் தலைமையில் நடத்தப்பட்ட வீரம் செறிந்த போராட்ட இயக்கத்திற்குப் பிறகு, ஆளும் கட்சி இந்த விவசாய விரோத சட்டங்களை ரத்து செய்ய வேண்டி வந்தது.

### லத்தீன் அமெரிக்காவும், ஐரோப்பாவும்

**பல லத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரி சக்திகளின் எழுச்சி நமக்கு நம்பிக்கை அளிக்கிறது. தற்போது, லத்தீன் அமெரிக்காவின் மக்கள் தொகை அதிகமுள்ள ஏழு நாடுகளான பிரேசில், மெக்ஸிகோ, கொலம்பியா, அர்ஜென்டினா, பெரு, வெனிசுலா மற்றும் சிலி ஆகியவை இப்பிரதேசத்தின் 80 சதவீத மக்கள் ஆதரவுடன் இடதுசாரித் தலைவர்களின் தலைமையில் அமைந்த அரசுகளால் ஆளப்படுகின்றன. அவர்கள் கூட்டாகப் புதிய தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளுக்குப் பெரும் சவாலை முன் வைக்கின்றனர்.**

லத்தீன் அமெரிக்கா நமக்கு நம்பிக்கை அளித்தாலும், இன்றைய நாட்களில் ஐரோப்பா வலதுசாரி அரசுகள் பக்கம் செல்வது அதிகரிக்கிறது. இத்தாலியில் சமீபத்தில் ஜியார்ஜி மெலோனி தேர்ந்தெடுக்கப்பட்டது, அவரது ‘பிரதேர்ஸ் ஆப் இத்தாலி’ கட்சி அதன் வேர்களை வெளிப்படையாகப் பாசிசத் தலைவர் பெனிடோ முஸோலினியிடம் கொண்டுள்ளது. சமீபத்தில் முடிவடைந்த ஃபிரான்சு அதிபர் தேர்தலில் அதி தீவிர வலதுசாரி தலைவர் மரைன் லே பென் 41 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார்.

ஐரோப்பாவில் அதி தீவிர வலதுசாரி கட்சிகள் தங்கள் தேசியவாத வார்த்தை ஜாலங்கள், புலம்பெயர்ந்து வருவோருக்கு எதிரான வன்முறை வெறிஉணர்ச்சி ஊட்டல், அதிகாரத்துவப் போக்குகள், பன்முக கலாச்சார எதிர்ப்பு, பாலின உரிமைக்கு எதிர்ப்பு மற்றும் தனித்த தேசிய அடையாளத்தில் உழலுதல் இவற்றோடு குறிப்பிடத்தக்க வேகம் பெற்று வருகின்றன.

### போர்களும் இராணுவக் கூட்டுகளும்

ரஷ்ய உக்ரைன் போரின் காரணமாக எரிபொருள் மற்றும் உணவு விலைகள் ஏறுவது, ஏற்கனவே சிக்கலில் இருக்கும் ஐரோப்பாவின் பாதிப்புகளை மேலும் அதிகரிக்கப் போகிறது. 1945குப் பிறகு, ஐரோப்பிய கண்டத்தின் இராணுவமயமாக்கல் வேகம் அதிகரிக்கிறது, அதனுடன் இராணுவத் தொழில் கூட்டு வளாகங்கள் செழிக்கத் தொடங்கியுள்ளது.

அமெரிக்காவின் இராணுவ தொழில் வளாகம் பதற்றத்தை ஏற்படுத்தவும், பனிப்போர் மற்றும் போர் போன்றதொரு நிலையைத் திணிக்கவும் முயற்சிக்கிறது. எனவேதான், நேட்டோ இராணுவக் கூட்டு மற்றும் பிற, பிரதேசக் கூட்டுகளை வற்புறுத்துவது ஆயுதப் போட்டியையும், மோதல்களையும் ஏற்படுத்தும் என்று நாம் பார்க்கிறோம்.

### சுற்றுச் சூழலியலில் பாதிப்பு

நமது ஒட்டுமொத்த சுற்றுச் சூழல் காரணமான பெரும் துன்பத்திற்குப் புதிய தாராளமயக் கொள்கைகள் நேரடியாகத் தொடர்புடையது. உலகளாவிய சுற்றுச் சூழலியல் நிலைமை தீவிரமாகக் கவலை அளிப்பதாகும்; அது உடனடியாக அனைத்து அரசுகளும் கூட்டாக நடவடிக்கை எடுக்கக் கோருகிறது. ஐநா மன்றத்தின் சுற்றுச்சூழல் செயல் திட்டம் (யுஎன்இபி) வெளியிட்ட வாயுகள் ‘வெளியேற்ற இடைவெளி அறிக்கை, 2022’, “பாரீஸ் பருவநிலை உடன்பாட்டு இலக்குகளை அடைவதில் இன்னும் பின் தங்கி இருக்கிறோம்” என்று குறிப்பிடுகிறது.

உலகின் தொடரும் வெப்ப அதிகரிப்பு தீவிரமான பருவநிலை பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. வறட்சி, கடும் வெள்ளம், புயல்கள் மற்றும் பற்றி எரியும் காடுகள் என ஏற்கனவே உலகம் முழுவதும் மனித வாழ்வையும், வாழ்வாதாரத்தையும் பேரழிவுக்கு உள்ளாக்கி உள்ளன. பருவநிலை அழிவை நிறுத்துவதற்கு நமக்குத் தேவை அரசியல் உறுதி மற்றும் கூட்டு நடவடிக்கை; அந்தத் தேவையைப் பொருத்தவரை நமது உலகத் தலைமையிலும், தேசியத் தலைமையிலும் பற்றாக்குறையே நிலவுகிறது.

### நாம் என்ன செய்ய வேண்டும்?

கூட்டான போராட்டம் மூலம் மட்டுமே நியாயமான மற்றும் அமைதியான உலகிற்கான நமது கண்ணோட்டம் நனவாக்க முடியும். பல நாடுகள் மற்றும் அரசு அமைப்புகளில் நிலவும் சமூக மற்றும் பொருளாதாரச் சமத்துவமின்மைக்கான காரணங்களின் மூல வேரை (‘நோய் முதல் நாடுவது’ போல) நேரடியாகத் தாக்கினால்தான் நியாயமான உலக ஒழுங்கு முறையை ஏற்படுத்த முடியும். அந்தந்த தேசங்களில் சமூகச் சமத்துவமின்மைக்கு எதிரான கூட்டுப் போராட்டங்கள் மற்றும் வலுவான சுகாதாரக் கட்டமைப்புகள், கல்வி முறை மற்றும் உணவு எரிபொருள் பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளுக்கான நமது இணைந்த போராட்டம் உலக ஒழுங்குமுறையில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

பெண்கள் சர்வதேச ஜனநாயக சம்மேளனம் (WIDF), அமைதி, தேசிய இறையாண்மை, ஜனநாயகம் மற்றும் வளர்ச்சிக்கான விரிவான போராட்டத்திலிருந்து, பெண்களின் சமத்துவத்திற்கான போராட்டம் பிரிக்க முடியாது என நம்புகிறது. அதற்கு, அனைத்து வகையான பாரபட்சம் மற்றும் ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவது என்பது ஒரு முக்கியமான அம்சம்.

**உலகம் முழுவதுமுள்ள மக்கள் கடினமான காலத்தில் வாழ்ந்து வருகிறார்கள். தீவிரவாதம், அடிப்படைவாதம், ஏழ்மை, வேலையின்மை முதலிய பிரச்சனைகள் அமைதி மற்றும் வளர்ச்சிக்கு தினசரி ஆபத்தை ஏற்படுத்துகின்றன. நெருக்கடியான இந்த எல்லாச் சூழ்நிலைகளிலும் மிக மோசமான பாதிப்புக்கு ஆளாவோர் பெண்களும் குழந்தைகளுமே.**

இறையாண்மை, சமத்துவம், சமூக நீதி மற்றும் சமாதானத்திற்காக நாம் நம்மை அர்ப்பணிப்போம்! வன்முறை, ஆக்கிரமிப்பு, அதிகாரத்துவம் மற்றும் ஏகபோகங்களுக்கு ஆதரவுக்காக மூர்க்கமான போர்க் கொள்கைகளுடன் விளங்கும் ஏகாதியபத்தியத்திற்கு எதிராகப் போரிடுவதற்காக நாம் நம்மை அர்ப்பணிப்போம்!

சர்வதேச ஒருமைப்பாடு மற்றும் சமாதானம் நீடு வாழ்க!

நன்றி: நியூஏஜ் (டிச.11 – 17)
தமிழில்: நீலகண்டன்

# தொடர் போராட்டம்

ஒரு வருடத்திற்குள் நான்கு தவணைகளாக கொடுக்கப்படும், வங்கிகளுக்கு கொடுக்க வேண்டிய கடன்பாக்கி எங்களுக்கு பொறுப்பு இல்லை என்று புதிய நிர்வாகம் கூறிய நிலையில் போராட்டம் தொடர்கிறது.

இச்சூழலில் இந்த விவசாயிகள் ஐந்து பேர்கள் மீது வழக்கு போட்டு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது என்பது வேதனையாகும். அதுவும் ஐ.பி.சி. 506/2 பிரிவில் போட்டு விவசாயிகளை மிரட்டி உள்ளது. எதற்கும் அஞ்சாது போராட்டம் தொடர்கிறது. இந்த நிர்வாகம் விவசாயிகளை மட்டும் ஏமாற்றவில்லை. அரசையும், அதிகாரிகளையும் அல்லவா ஏமாற்றி உள்ளது.

1984இல் போபாலில் ஏற்பட்ட விஷவாயு விபத்தில் பல்லாயிரம் பேர் இறந்தார்கள். பல லட்சம் பேர் உடல்நிலை பாதிக்கப்பட்டார்கள். இதன் உரிமையாளர் வாரன் ஆண்டர்சன் அமெரிக்காவில் இருந்து கொண்டே இந்தியாவுக்கு வராமல் இந்த ஆலையை விற்பனை செய்து விட்டார். நீதிமன்றமோ இந்த கம்பெனியை வாங்கிய நிர்வாகமே இதற்குரிய இழப்பீட்டை கொடுக்க பொறுப்பாகும் என தீர்ப்பளித்தது.

சாதாரணமாக கிராமங்களில் நிலம் வாங்குகிற போது விற்ற இடத்தில் ஏதும் வில்லங்கம் ஏற்பட்டால் தானே பொறுப்பு என எழுதி கொடுத்து ஈடு செய்யும் நடைமுறை இன்றைக்கும் உள்ளதே. இவை எதையும் பின்பற்றாது திட்டமிட்டு மோசடி செய்த இந்த நபர் மீது உரிய குற்றவியல் நடவடிக்கை எடுத்திட வேண்டும். இந்த ஆலையை அரசே ஏற்று நடத்திட வேண்டும். இதன் மூலம் வங்கிகளுக்கு சேர வேண்டிய 300 கோடி ரூபாயை அரசே திருப்பி செலுத்தி, விவசாயிகளை சிபில் ஸ்கோர் பிரச்சனையிலிருந்து விடுவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு வரவேண்டிய பாக்கி தொகை ரூ.85 கோடியை அரசே வழங்கிட வேண்டும் என்ற இவர்களின் கோரிக்கையை தமிழக முதல்வர் அவர்கள் தலையிட்டு உரிய தீர்வுகாண வேண்டுமாய் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு பி.எஸ். மாசிலாமணி கூறியுள்ளார்.

# அரியலூரில் ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்




அரியலூர் அண்ணா சிலை அருகில் மாவட்டப் பொதுச் செயலாளர் த.தண்டபாணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியூசி உள்ளாட்சித் துறை பணியாளர் சம்மேளன மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் பி.எல்.ராமச்சந்திரன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். ஏஐடியூசி மாவட்டத் துணைத் தலைவர் ஆர்.தனசிங், விவசாய சங்க மாவட்ட துணைச் செயலாளர் ஜி.ஆறுமுகம், கட்டிட சங்கம் டி.ஜீவா ஆகியோர் உரையாற்றினார். குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் கீழ் அரசாணை 62ன் படி நிர்ணயத்துள்ள ஊதியத்தை உள்ளாட்சி நகராட்சி,பேரூராட்சி, கிராம ஊராட்சி துப்புரவு தொழிலாளர்கள், ஓ.எச்.டி. ஆபரேட்டர்களுக்கு வழங்கிட வேண்டும். மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்ட தினக்கூலி ஊதியத்தை ஜெயங்கொண்டம் நகராட்சி ஒப்பந்த துப்புரவு தொழிலாளர்களுக்கு வழங்க மறுத்து வரும் போக்கினை கைவிட்டு ஏற்கனவே 52 மாத ஆரியர்சுடன் வழங்கப்பட வேண்டும்.

சேலம் தஞ்சாவூர் இணைப்பு புதிய ரயில் பாதை அமைத்தல், உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நடைபெற்ற ஆர்ப்பாட்டம் முடிவில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.



ஜி.ஆர்.இரவீந்திரநாத்

**“உலக சமாதான, மதநல்லிணக்க, மக்கள் ஒற்றுமை” கருத்தரங்கங்கத்தை அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகம், சென்னையில் நடத்துகிறது. அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் (ஐப்சோ) அதாவது, All India Peace and Solidarity Organisation (AIPSO) ஒரு பன்முகத்தன்மை வாய்ந்த ஜனநாயக அமைப்பாகும். உலகில் சமாதானம் நிலை பெறுவதற்காக உறுதியோடு செயல்படும் அமைப்பாகும். “உலகம் சமநிலை பெற வேண்டும், உயர்வு தாழ்வில்லா நிலை வேண்டும்” என்ற உயரிய நோக்கோடு செயல்படும் அமைப்பாகும்.**

# டிசம்பர் 22-ல்

# உலக சமாதான மதநல்லிணக்க மக்கள் ஒற்றுமையை உயத்திப் பிடிப்போம்



உலக நாடுகளிடையே, உலக மக்களிடையே ஒற்றுமையும், ஒருமைப்பாடும், நட்பும், நல்லுறவும் வலுப்பட செயல்படும் அமைப்பாகும் ஐப்சோ.

மானுட முன்னேற்றத்திற்கு உலக சமாதானமும், அமைதியும் அவசியம் எனக் கருதும் அமைப்பாகும்.

மானுட முன்னேற்றத்திற்கு போர்களற்ற, ஆக்கிரமிப்புகளற்ற, சுரண்டலற்ற, மதவெறியற்ற, சாதி, மத, இன, மொழி, நிற, பாலின பாகுபாடுகளற்ற, புறக்கணிப்புகளற்ற, வகுப்புவாதமற்ற, பிரிவினைவாதமற்ற சூழல் வேண்டும் என்ன கருத்தை முன்னிலைப்படுத்தும் அமைப்பாகும்.

மனிதர்கள் அனைவரும் சமம் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். மனிதர்கள் அனைவரும் மனிதநேயத்தோடும், மனித மாண்போடும் நடத்தப்பட வேண்டும். இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டு எதிர்கால சந்ததியினருக்கு அளிக்கப்பட வேண்டும் என செயல்படும் அமைப்பு “ஐப்சோ”.

ஐப்சோ, எந்த அரசியல் கட்சியையும் சார்ந்த அமைப்பல்ல. இது வெகுமக்களின் அமைப்பாகும். ஜனநாயக மாண்புகளையும், சமூக நீதியையும் விரும்பும் அனைத்து மக்களையும் ஒருங்கிணைக்கும் மகத்தான கடமையை அவ்வமைப்பு செய்கிறது.

## AIPSO வரலாற்றுப் பின்னணி.

காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் வீரத் தழும்புகளை ஏந்திய பாரம்பரியத்தை கொண்டது “ஐப்சோ”.

இதன் முன்னோடிகள் இந்திய விடுதலைக்காக அளப்பரிய தியாகங்களை செய்துள்ளனர்.

இந்த விடுதலைப் போராட்ட வீர வரலாற்று அனுபவம், விடுதலைக்கான போரை தனித்து நடத்திட இயலாது என்ற படிப்பினையை அளித்தது.

விடுதலைக்காகப் போராடும் இதர மக்களுக்கான ஆதரவு, நமது விடுதலைக்கான போராட்டத்தின் ஓர் பகுதி என உணர்த்தியது.

இந்த அனுபவம், ஐப்சோவின் நோக்கங்களை, லட்சியங்களை வகுத்துக் கொள்ள உதவியது.

இந்நிலையில், 1951 ல், அகில இந்திய சமாதானக் கவுன்சில் (All India peace Council)என்ற அமைப்பு தொடங்கப்பட்டது.

அது தொடங்கப்பட்ட காலத்தில் உலகில் ஏராளமான நாடுகளில் மக்கள் காலனிய ஆதிக்கத்தை எதிர்த்து போராடிக் கொண்டிருந்தனர்.

பாசிசம் சோவியத் செஞ்சேனையால் வீழ்த்தப்பட்டிருந்தது. பல நாடுகளில் சோசலிசத்தை கட்டி எழுப்புவதற்கான நிலைமைகள் உருவாகின.

சோசலிச நாடுகளின் முகாம் உதயமானது.

ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது, அணுகுண்டுகள் வீசப்பட்ட கொடூரம் நடந்திருந்தது.

உலக மேலாதிக்க அரசியல் நோக்கத்திற்காக அணுகுண்டுகளை அமெரிக்கா பயன் படுத்தியது. இந்த பயங்கரவாதச் செயல், உலக மக்களிடையே, அணு ஆயுதங்களுக்கு எதிரான போராட்டங்களை, போருக்கு எதிரான இயக்கங்களை உலகம் முழுவதும் தோற்றுவித்திருந்தது.

சமாதான இயக்கங்கள் தோன்றி, வலுப்பெற தொடங்கின.

பனிப்போர் கெடுபிடி நிலையும், செல்வாதாரங்கள் ஆயுதப் போட்டிக்காக அளப்பரிய அளவில் செலவிடப்பட்டதும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளும், அணு ஆயுதப் போர் ஆபத்தும், வலுவான சமாதான இயக்கத்தை கட்டி எழுப்ப வேண்டிய அவசியத்தை உருவாக்கியது. இந்தச் சூழலில் உலக சமாதான கவுன்சில் (World Peace Council )1950 ல் உருவானது.

உலக சமாதானக் கவுன்சிலின் வேண்டுகோளின் அடிப்படையில், உலகின் பல்வேறு நாடுகளில் சமாதானக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இந்தியாவிலும் ,அகில இந்திய சமாதானக் குழு (All India Peace Council ) 1951 ல் தொடங்கப்பட்டது.

உலக சமாதானக் கவுன்சிலுடன் இணைந்த அமைப்பாக அது செயல்படத் தொடங்கியது.

இந்த அமைப்பை தொடங்குவதில் இந்தியாவின் முற்போக்கு சிந்தனையாளர்கள் டாக்டர் சைஃபுதின் கிட்ச்லு, டி.மாலவியா, ராமேஷ்வரி நேரு, அருணா அஷஃப் அலி, பண்டிட் சுந்தர்லால், டாக்டர் எம்.எம்.அடல் அஜாய் கோஷ், ஏ.கே.கோபாலன், டி.டி.கோசாம்பி, பிரிதிவி ராஜ் கபூர், பால்ராஜ் ஷானி, எழுத்தாளர்கள் மற்றும் அறிவு ஜீவிகள் கிரிஷன் சந்தர், ராஜேந்திர சிங் பேடி, வல்லத்தோள், எஸ்.குர்பாக்ஸ் சிங், வி.வி.கிருஷ்ண மேனன், கே. முல்க்ராஜ் ஆனந்த் போன்றோர் மகத்தான பங்கை ஆற்றியுள்ளனர்.

1972 ல் அகில இந்திய சமாதானக் கவுன்சில், அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் (All India Peace and Solidarity Organisation - AIPSO) என்ற புதிய பரிமாணத்தை பெற்றது.

ஐப்சோவின் செயல்பாட்டிற்கு முன்னாள் பிரதமர்கள் நேரு, இந்திராகாந்தி மற்றும் ரொமேஷ் சந்திரா, ராஜாஜி போன்றோர் துணை நின்றனர். குன்றக்குடி அடிகளார், டாக்டர் எஸ்.ராமகிருஷ்ணன், டாக்டர் நடராஜன், டாக்டர் புதுவை ரெங்கநாதன், வழக்கறிஞர் தஞ்சை ராமமூர்த்தி, தஞ்சை ஏ.பி.ராமசாமி, தொலைபேசி எஸ்.ஜெகன் போன்றோர்கள் தங்களது பங்களிப்பை செய்துள்ளனர்.

**உலக சமாதானத்தை நிலைநாட்டல், போரற்ற, அணு ஆயுதமற்ற உலகை படைத்தல், ஜனநாயகம், சமூக நீதி, சமத்துவம், மனித மாண்பை காத்தல், சுற்றுச் சூழலை பாதுகாத்தல், அனைவருக்கும் நலவாழ்வை உறுதி செய்தல் உள்ளிட்ட உன்னத நோக்கங்களுக்காக இவ்வமைப்பு தொடர்த்து செயலாற்றி வருகிறது.**

இந்த அமைப்பில், இடது சாரி, ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற அமைப்புகள் இணைந்து செயல்படுகின்றன.

இந்நிலையில், இந்தியாவில் இந்துத்துவ மதவெறி அரசியலை சங்பரிவார் அமைப்புகளும், ஒன்றிய அரசும் மூர்க்கத்தனமாக நடைமுறை படுத்துகின்றன.

மக்களை மத ரீதியாக பிளவு படுத்தும் முயற்சிகள் தீவிர மடைந்துள்ளன. சிறுபான்மை மதங்களைச் சேர்ந்த மக்களுக்கு எதிராகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகவும் வெறுப்புணர்வு நெருப்பு, சங் பரிவார வெறி கூட்டத்தால் எண்ணெய் ஊற்றி வளர்க்கப்படுகிறது.

இந்துத்துவ பாசிச காரிருள் இந்தியாவை கவ்வியுள்ளது. பாசிச அபாயத்தை தடுத்திட, மதநல்லிணக்கத்தை பேணிட, மக்கள் ஒற்றுமையை வலுப்படுத்திட, அரசியல் சட்டத்தை பாதுகாத்திட, ஜனநாயகத்தை பாதுகாத்திட, மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் இடதுசாரி சக்திகளின் பரந்து பட்ட மேடையை உருவாக்க வேண்டியது மிகவும் அவசர அவசியமாகியுள்ளது.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்துத்துவ மத வெறி அரசியலை முறியடிக்க வேண்டியதும், மதநல்லிணக்கத்தை காக்க வேண்டியதும், மக்கள் ஒற்றுமையை கட்டி எழுப்ப வேண்டியதும் அவசர அவசியமாகி உள்ளது. அத்தகைய நோக்கத்தை நிறைவேற்ற “ஐப்சோ” போராடி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளும், நேட்டோ ராணுவ கூட்டணியும், ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே போரை மூட்டிவிட்டுள்ளன.

உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளன. அணு ஆயுதப்போர் ஏற்படும் பேராபத்தை உருவாக்கியுள்ளன.

ஆசிய – பசிஃபிக் பகுதியில் குவாட் (QUAD) ,ஆகஸ்(AUKUS) போன்ற “நேட்டோவை” ஒத்த ராணுவக் கூட்டணிகளை, அமெரிக்கா உருவாக்கி, சீனா – தைவான் இடையே, ராணுவ மோதலை உருவாக்க முயல்கிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டம் மூலம் உருவான, இந்தியாவின் அணிசேரா கொள்கைக்கு எதிராக இந்தியாவையும் குவாட் ராணுவக் கூட்டணியில் ஒன்றிய அரசு இடம் பெறச் செய்துள்ளது.

இந்த “குவாட்” ராணுவக் கூட்டணி மூலம், இந்தியாவையும் சீனாவிற்கு எதிராக தூண்டிவிடும் வகையில் சூழ்ச்சி வலைகளை, அமெரிக்கா பின்னுகிறது.

அமெரிக்காவின் இத்தகைய போர் வெறி, ஆசிய ஞ பசிஃபிக் பகுதியின் சமாதானத்திற்கும், அமைதிக்கும் அச்சுறுத்தலாகியுள்ளது.

இந்நிலையில், ஆசிய பசிஃபிக் பகுதியில் அமைதியை பேணவும், உலக சமாதானத்தை பாதுக்காக்கவும், அமெரிக்காவின் சதிகளை முறியடிக்கவும், உலக சமாதானச் சக்திகளை வலுப்படுத்தவும் வேண்டும்.

போரின் ஊற்றுக் கண் ஏகாதிபத்தியம். ஏகாதிபத்தியம் இருக்கும் வரை போர் அச்சுறுத்தல் நீடிக்கும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரம் “போர் பொருளாதாரமாகியுள்ளது”.

உற்பத்திச் சாதனங்களின் தனி உடைமையை கொண்ட சமூகப் பொருளாதார அமைப்பும், சுரண்டலும் போர்களுக்கும், ஆயுத மோதல்களுக்கும் அடிப்படை காரணமாக உள்ளன .

எனவே, உலக சமாதானத்திற்கான போராட்டம் என்பது சாராம்சத்தில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வர்க்கப் போராட்டமாகும். சுரண்டலை ஒழிப்பதற்கான போராட்டமாகும்.

சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட, சமூகப் பொருளாதார அமைப்பையும், நாடுகளுக்கிடையேயான உறவுகளையும் மாற்றுவதற்கான போராட்டமாகும்.

நாடுகளின், மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்வதற்கான போராட்டமாகும்.

அப்போராட்டத்தில் இந்திய மக்களையும் அணி திரட்ட வேண்டிய மாபெரும் பணி, கடமை, நோக்கம் “ஐப்சோ” விற்கு உள்ளது.

இக் நோக்குடன், 2022 டிசம்பர் 22 வியாழன் அன்று மாலை 5.00 மணிக்கு சென்னையில் AIPSO சார்பில் “உலக சமாதான, மதநல்லிணக்க மக்கள் ஒற்றுமை” கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

தொடர்புக்கு: 9940664343



◆ தமிழ்நாடு கோவில் மனையில் குடியிருப்போர் சங்க மாநிலக்குழு கூட்டத்தில், சங்கத்தின் மாநிலத் தலைவர் வி.அ.பாலசுப்பிரமணியன், மாநிலப் பொருளாளர் எஸ்.ஏழுமலை ஆகியோரிடம், தோழர் சசிக்குமார் தான் பயன்படுத்தி வந்த மடிகணினியை சங்கத்தின் பயன்பாட்டிற்காக வழங்கினார்.

சங்கே முழங்கு!

# வெண்மணியின் தீயில் நெல்மணிகள்

கீழே தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம் அருகாமையில் கீழ்வெண்மணியில் 1966 ஆம் ஆண்டுகளில் நடந்த கொடூர சம்பவம். கீழ தஞ்சை பகுதியில் மிகப்பெரிய ஜமீன்தாரர்களும் மற்றும் பண்ணையாளர்களும் விவசாய கூலித்தொழிலாளிகளை அடிமைகளை போல கேவலமாக நடத்தினர். அவர்களுடைய உழைப்பை சுரண்டி கொண்டிருந்தனர். அதே வேலையில் வெண்மணி கிராமத்திலும், அதன் சுற்றுவட்ட கிராமங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாய சங்கங்கள் வளர்ந்து வர ஆரம்பித்தன.

தொழிலாளர்கள் தங்களை சங்கத்தில் இணைத்து கொண்டனர். விவசாயிகள் சங்கத்திற்கு எதிராக நிலக் கிழார்கள் நெல் உற்பத்தியாளர்கள் சங்கம் என்ற சங்கத்தை 1968ல் இருஞ்சியூர் கோபாலகிருஷ்ணன் தொடங்கினார். அவர் மிகப் பெரிய நில உடமைக்களராக திகழ்ந்தார். அவரிடம் வேலை பார்த்த கூலி தொழிலாளர்கள், ‘‘ஐயா நீங்கள் கொடுக்கும் கூலி எங்களுக்கு போதவில்லை, ஒரு அரைப்படி நெல்லை உயர்த்தி கொடுங்கள்’’ என்று கேட்டனர்.

என்னை கண்டால் தூரத்தில் நிற்பவர்கள் இப்ப என் எதிரில் வந்து கூலி உயர்வு கேட்கின்றனர் என்று கோபப்பட்டார். அப்படியானால் உங்கள் ஊரில் ஏற்றி இருக்கின்ற விவசாயிகள் சங்க செங்கொடியை இறக்கி விட்டு நீங்கள் எங்களுடைய நெல் உற்பத்தியாளர் சங்க மஞ்சள் கொடியை ஏற்றுங்கள் என்று சொன்னார். உடனே, ‘‘விவசாயத் தொழிலாளிகள் எங்கள் உடம்பில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் எங்கள் சங்க கொடியை இறக்கமுடியாது’’ என கூறிவிட்டனர்.

நீங்கள் வேலைக்கு வரவேண்டாம் என கூறினார். பின்னர் வெளியூரிலிருந்து அறுவடை செய்ய ஆட்கள் வந்து இறங்கினர். அதை தடுத்து நிறுத்தினர் கிராம மக்கள். உள்ளூரில் இவ்வளவு தொழிலாளிகள் இருந்தும் வெளியூர் கூலி ஆட்கள் வருவதை தடுத்து நிறுத்தினர் விவசாயிகள். இச்செய்தி தெரியவந்ததும், இவர்களை அடித்து ஊரை விட்டு விரட்டி அடிப்பதற்கு சரியான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் பண்ணையார்.

1968 ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் தேதி உலகமே இயேசு கிறிஸ்து பிறந்த நாளை கொண்டாடி கொண்டிருக்கிற நேரத்தில் நள்ளிரவில் பண்ணையார் கோபாலகிருஷ்ணனின் அடியாட்கள், குண்டர்கள் சுமார் 200 பேர் கொண்ட கும்பல் கீழ்வெண்மணி கிராமத்தில் நள்ளிரவில் நுழைந்து, தெருக்களில் கடப்பாறைகளுடன் அரிவாள், வேல், கம்புகளுடனும், நாட்டுத் துப்பாக்கிகளுடனும் அந்த கிராமத்தை அடித்து நொறுக்கி சூறையாடினர். ஏழை, எளிய மக்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என ஓடி ஒளிந்தனர். அங்கு இருந்த பல ஆண்கள் வயல்வெளியிலும், வரப்பு காட்டிலும் உயிருக்கு பயந்து பதுங்கினர். அந்தத் தெருவில் கடைக்கோடியில் இருக்கக்கூடிய ராமையாவின் சிறிய குடிசை வீடு எட்டுக்கு ஒன்பது அடி நீளம் கொண்ட கொட்டகை வீட்டில் சுமார் நாற்பத்தி நான்கு பேர் தஞ்சம் புகுந்தனர். அதில் இறுபது பெண் மற்றும் பத்தொன்பது குழந்தைகள் உட்பட ஆறு ஆண்கள் தஞ்சம் அடைந்தனர். கோபாலகிருஷ்ணனின் அடியாட்கள் கதவை இழுத்துப் பூட்டிவிட்டு உள்ளே சென்ற தொழிலாளிகளை வெளியே வராத அளவிற்கு செய்துவிட்டு, வெளிப்புறத்தில் இருந்து அந்த வீட்டிற்கு தீ வைத்து கொளுத்தினர். உள்ளே இருந்த தன் குழந்தைகள் பிழைத்துக் கொள்ளட்டும் என குழந்தைகளை வெளியே தூக்கி எறிந்தனர். அதே குழந்தைகளை திரும்பவும் தீயிலே தூக்கி போட்டனர் அடியாட்கள். அனைவரும் அதே இடத்தில் வெந்து மடிந்தனர். அங்கு உயிர் இழந்தது நாற்பத்தி நான்கு உயிர்கள் மட்டுமல்ல, இந்தியாவின் எதிர்கால தலைமுறையும் தான். இச்செய்தி உலகம் முழுவதும் காட்டுத்தீ போல் பரவ ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் சீன வானொலி வரை இச்செய்தி பரவியது. இக்கொடுமைச் சம்பவத்தில் ஈடுபட்ட கோபாலகிருஷ்ணன், அவருடைய ஆதரவாளர்களுக்கு பத்தாண்டு கால கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தார் கோபாலகிருஷ்ணன். அவரது ஆதரவாளர்களுக்கும் மிராசுதாரர்கள் என்பதால் நீதிமன்றத்தில் இருந்து விடுதலை ஆகினர். 31.10.1980 ஆம் ஆண்டு வெளியில் வந்த கோபாலகிருஷ்ணனை அதே இடத்தில் வைத்து 44 துண்டுகளாக வெட்டி வீழ்த்தப்பட்டார். கீழவெண்மணியில் தீக்கிரையாக்கப்பட்ட 44 தொழிலாளர்களை நினைவு கூரும் விதமாக, ஆண்டுதோறும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் இணைந்து தீயால் மாண்ட தியாகிகளின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இதுதான் கீழ்வெண்மணி வீர வரலாறு.

– செகுவேராதாஸ்

# ஆறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய மாதர் தேசிய சம்மேளனம் ஆர்ப்பாட்டம்




இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழக அரசிடம் 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் டிச.12 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை சம்மேளன மாநில துணைச் செயலாளர் டி.பி.லலிதா துவக்கி வைத்தார்.

மாவட்டத் தலைவர் எஸ்.மோனிஷா தலைமை வகித்தார். மாநில குழு உறுப்பினர் வி.சரசு, மாவட்டச் செயலாளர் எம்.மீனா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து சிபிஐ மாவட்டச் செயலாளர் கே.அன்புமணி பேசினார். மாவட்டப் பொருளாளர் எம்.மாதேஸ்வரி நன்றி கூறினார்.

# மாண்டஸ் புயல்: அரசின் நடவடிக்கை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டு

வங்கக் கடலில் உருவான ‘‘மாண்டல்’’ புயல் கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டு மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை சீற்றங்களை எதிர்கொண்ட அனுபவத்தில், மாண்டஸ் புயல் தாக்குதலை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை விரிவாக மேற்கொண்டது. இதற்கான முன் முயற்சிகளை மேற்கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ‘‘பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை, எந்த நிலையினையும் சந்திக்க அரசு தயார் நிலையில் உள்ளது’’ என அறிவித்தார்.

பேரிடர் மீட்புக் குழு, நிவாரண ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டன. இந்தச் சூழலில் வெள்ளிக்கிழமை (09.12.2022) நள்ளிரவு தொடங்கி, சனிக்கிழமை (10.12.2022) அதிகாலை மூன்று மணி வரை செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் அருகில் மாண்டஸ் புயல் கரை கடந்தது.

சென்னைப் பெருநகரின் வீதிகளில் மழை வெள்ளம் தேங்காமல், போக்குவரத்து தடையின்றி இயங்கியது. மின்சாரம் பெருமளவு தடையின்றி கிடைத்தது. எல்லாவற்றுக்கும் மேலாக புயல் காற்றின் தாக்குதலில் விழுந்த மரங்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டன. மாண்டஸ் புயலில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல் சமாளித்த அரசின் நடவடிக்கை அனைவரின் பாராட்டுதலை பெற்றுள்ளது.

குறிப்பாக ஆயிரக்கணக்கான துப்புரவுப் பணியாளர்கள் கடுமையான புயல் காற்றும், தொடர் மழையும் இருந்த நேரத்தில், சாலைகளில் இறங்கி, களப்பணியாற்றியது, நாட்டின் எல்லைகளில் பணியாற்றும், ராணுவ வீரர்களை நினைவூட்டியது. மக்கள் சமூகம் எதிர்கொள்ளும் இயற்கை பேரிடரை எதிர்கொள்ள முதலமைச்சர், மூத்த அமைச்சர்கள், அரசின் துறைத் தலைவர்கள், பெருநகர ஆணையர், மேயர் என அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வெற்றி பெற்றிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, பாராட்டி வாழ்த்துகிறது.

மாண்டஸ் புயல் காற்றில் உயிரிழந்துள்ளோர் குடும்பங்களுக்கும், பயிர்களை இழந்து நிற்கும் விவசாயிகள், வாழ்விடம் உள்ளிட்ட வாழ்வாதாரம் இழந்துள்ள குடும்பங்களுக்கும் போதுமான நிவாரண உதவிகள் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## திருமண விழாவில் தோழர் சி.எஸ். கட்டிட நிதி

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் நகரச் செயலாளர் தோழர் எம்.வேலுசாமி – மகாலெட்சுமி தம்பதியரின் புதல்வர் வே.அலெக்ஸ் பாண்டியன் – ஜி.லீலாவதி திருமணம் டிசம்பர் 4 அன்று நடைபெற்றது. திருமண விழாவில் தோழர் சி.எஸ். கட்டிட நிதியாக ரூ.1000 வழங்கப்பட்டது.

# ம.தி.சோழர் முதலாம் ஆண்டு நினைவு தினம்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாவட்ட முன்னாள் செயலாளர் ம.தி.சோழர் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நினைவு கல்வெட்டு மற்றும் கொடியேற்று விழா உறையூர் சாலை ரோட்டில் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா தலைமையில் நடைபெற்றது. கல்வெட்டை மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் திறந்து வைத்தார். கட்சி கொடியினை 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ் ஏற்றி வைத்தார்.

படத்தினை வழக்கறிஞர் என்.பாலகிருஷ்ணன் திறந்து வைத்தார்கள். கிளை செயலாளர் எம்.துரைராஜ் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியில் துணை செயலாளர் க.இப்ராஹிம் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டார்கள். முடிவில் பகுதி குழு செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி நன்றி கூறினார்.

## கோவில்பட்டியில்
# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்



கோவில்பட்டி எட்டயபுரம் வளைவு சாலை, மங்கள விநாயகர் கோவிலில் இருந்து மந்திதோப்பு செல்லும் சாலையை விரிவுபடுத்த கோரியும், இப்பகுதியில் அடிக்கடி நடக்கும் சாலை விபத்துகளை தடுத்திட நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர குழு சார்பில், கோவில்பட்டி அண்ணா பேருந்து நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நகர துணை செயலாளர் முனியசாமி தலைமை வகித்தார். நகரச் செயலாளர் சரோஜா, துணைச் செயலாளர் அலாவுதீன், தாலுகா செயலாளர் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட குழு உறுப்பினர்கள் பரமராஜ், செல்லையா, ஜோசப், சேதுராமலிங்கம் ஆகியோர் பேசினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட குழு உறுப்பினர் கண்ணம்மா, நகர குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# போக்குவரத்து காவல்துறையைக் கண்டித்து சேலத்தில் ஆர்ப்பாட்டம்

சேலம் போக்குவரத்து காவல்துறையினர் நடுரோட்டில் நின்று இருச்சகர வாகனங்களில் செல்பவர்களை முரட்டுத்தனமாக துரத்திப் பிடிப்பதை கண்டித்தும், ஒன்றிய அரசு பல மடங்கு உயர்த்தி அறிவித்துள்ள அபராதத் தொகையை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தியும் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர் எம்.ராமன், ஏ.கந்தன், பொருளாளர் டி.கண்ணன் உட்பட 150க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கு பெற்றனர். வாகன ஓட்டிகள் நமது கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தனர்.

# பெத்தநாயக்கன்பாளையம் எஸ்.நடராஜன் மறைவு



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் முன்னாள் நகர செயலாளரும், இளைஞர் பெருமன்ற முன்னாள் மாவட்ட நிர்வாகியுமான எஸ்.நடராஜன் (வயது 67) உடல்நலக் குறைவால் டிச. 8 அன்று காலமானார். மாநில துணைச் செயலாளர் ந.பெரியசாமி, மாவட்ட செயலாளர் ஏ.மோகன், துணைச்செயலாளர்கள் எம்.ராமன், ஏ.கந்தன், பொருளாளர் டி.கண்ணன் மற்றும் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் டி.வி.கருணைதாஸ், என்.கே.செல்வராஜ், எம்.அர்ச்சுனன், வி.கலியமூர்த்தி, பி.சிவானந்தம், சி.குணசேகரன் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் பல்வேறு அரசியல் கட்சியினர் உட்பட ஏராளமானோர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

# தோழர் சி.நடராசன் காலமானார்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

சேலம் மாவட்டம், பெத்தநாய்க்கன்பாளையம் தோழர் சி.நடராசன் (67) டிச. 08 அன்று காலமானார் என்ற துயரச் செய்தி அறிந்து அதிர்ச்சியுற்றோம்.

பெத்தநாய்க்கன்பாளையத்தில் வசித்து வரும் விவசாயக் குடும்பத்தில் பிறந்த சி.நடராசன், விவசாயிகள் சங்கத்தின் தீவிர இயக்கத்தால் பொதுவாழ்வுக்கு ஈர்க்கப்பட்டவர். கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து இறுதி மூச்சுவரை கட்சி அமைப்பில் உறுதியுடன் நின்று செயல்பட்டவர்.

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் வேலை அல்லது நிவாரணம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி 1979 ஆம் ஆண்டு கோவை முதல் சென்னை வரை மேற்கொண்ட நடைபயண இயக்கத்தில் பங்கேற்றவர் சி. நடராசன். இவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நகரச் செயலாளர், மாவட்டக் குழு உறுப்பினர் பொறுப்புகளிலும் சிறப்பாக செயல்பட்டவர்.

தற்போது பெத்தநாய்க்கன் பாளையத்தில் காலனி கடை வைத்து, வியாபாரம் செய்து வந்தவர்.

இவரது வாழ்விணையர் கௌரி, ராகேஷ், பிரவீன் என இரண்டு மகன்கள் இருக்கின்றனர். சி.நடராசன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# மகாகவி பாரதியார் 141வது பிறந்தநாள் விழா



**ஆர்.கே.நகர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்டம் ஆர்.கே.நகர் தொகுதி 47வது வட்டக் கிளை சார்பாக, புரட்சிக்கவி பாரதியாரின் 141வது பிறந்தநாளை முன்னிட்டு அவருடைய திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

வடசென்னை மாவட்ட துணை செயலாளரும், ஆர்.கே. நகர் தொகுதி செயலாளருமான எம்.ஜெய்சங்கர் தலைமை தாங்கினார். முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பாரதியாரை பற்றி உரையாற்றினார். வடசென்னை மாவட்ட பொருளாளர் கீ.சு.குமார், வடசென்னை மாவட்ட துணை செயலாளர் ஜி.சுப்ரமணி, பாரதியாரின் சிறப்பை பற்றி உரை நிகழ்த்தினர்.

வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆர்.கே.நகர் தொகுதி பொருளாளர் கி.இராமலிங்கம், பெரம்பூர் தொகுதி செயலாளர் இரா.கோட்டி சுரேஷ் மற்றும் ஆர்.கே. நகர் தொகுதி 42வது மாமன்ற உறுப்பினர் வி.ரேணுகா மற்றும் திரளான தோழர்கள் பங்கேற்றனர்.

**சிவகிரி:** தென்காசி மாவட்டம் சிவகிரியில் மகாகவி பாரதியாரின் 141வது பிறந்தநாள் விழா நகர குழு சார்பில் பி.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவுபண்டகசாலை தலைவர் வி. ராஜேந்திரன், நகர துணை செயலாளர் கே. குருவு, இளைஞர் பெருமன்ற நகர செயலாளர் க.பு.பால்சாமி மற்றும் கட்சி தோழர்கள் கலந்து கொண்டனர்!

**சேலம்:** பாரதி பிறந்தநாளை முன்னிட்டு சாரல் இலக்கிய சிற்றிதழ் 5ம் இதழ் வெளியீட்டு விழா சேலம் பாரதி சிலை முன்பு நடைபெற்றது. கலை இலக்கிய பெருமன்ற மாவட்டதலைவர் பூமிபாலகன், சிபிஐ மாவட்ட செயலாளர் அ.மோகன், கலை இலக்கிய பெருமன்ற மாவட்டசெயலாளர் கே.வி.ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் பேராசிரியர் மணிகண்டன், இஸ்கப் மாவட்டபொதுச் செயலாளர் டி.வி.கருணைதாஸ், கலைஇலக்கிய பெருமன்ற கௌரவதலைவர் கே.சுவாமிநாதன் மற்றும் திரளான தோழர்கள் பங்கேற்றனர்.

# கடல் அலையில் இருந்து மின்சாரம் தயாரிக்க சென்னை ஐஐடியின் புதிய கருவி!

சென்னை: கடல் அலையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் கருவியை சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் 'ஓஷன் வேவ்எனர்ஜி கன்வெர்ட்டர்' என்ற கருவியை சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இக்கருவி கடந்த நவம்பர் மாதம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தூத்துக்குடி கடற்கரையில் இருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள கடல் பகுதியில் 20 மீட்டர் ஆழத்தில் இக்கருவி தற்போது நிறுவப்பட்டுள்ளது.

இதன்மூலம், அடுத்த 3 ஆண்டுகளில் கடல் அலைகளில் இருந்து 1மெகாவாட் மின்சாரம் உற்பத்திசெய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கருவி புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி உள்ளிட்ட காலநிலை மாற்றம் தொடர்பான பல்வேறு இலக்குகளை அடைய உதவும் என கூறப்படுகிறது.

அணு, அனல் மின்நிலையங்களுக்கு மாற்றாக புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திக்கு இது நிச்சயம் உந்து சக்தியாக திகழும். மின்சாரக் கட்டணமும் குறையும். குறைந்த கட்டணத்தில் மின்சாரம் என்ற இலக்கை அடைய உதவும்!

# "மகாத்மா மண்ணில் மதவெறி" நூல் வெளியீட்டு விழா

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) யின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன் எழுதிய, "மகாத்மா மண்ணில் மதவெறி" என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா திருச்சி சீனிவாசா மஹாலில் மார்க்சிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ராஜா தலைமையில் நடைபெற்றது. மார்க்சிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் ஸ்ரீதர் நூலை அறிமுகம் செய்து உரையாற்றினார். புத்தகத்தை திருச்சி கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் வெளியிட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் 23வது மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, மேற்கு பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி, மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க.இப்ராகிம். மதிமுக மாவட்ட செயலாளர் சோமு, வி.சி.க. அருள், தமிழாதன், மனிதநேய மக்கள் கட்சி மாமன்ற உறுப்பினர் பைஸ் அஹமது, காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் மாமன்ற உறுப்பினர் வி.ஜவஹர், இந்திய யூனியன் முஸ்லீம் கட்சி மாவட்ட செயலாளர் ஹபீபூர் ரஹ்மான் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இறுதியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன் உரையாற்றினார்.

# வீட்டு மனை பட்டா கேட்டு நரிக்குறவர்கள் கலெக்டரிடம் மனு



கள்ளக்குறிச்சி அருகே நீலமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட நரிக்குறவர் காலனியை சேர்ந்த நரிக்குறவர் இன மக்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டரிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது: நரிக்குறவர் இன மக்களாகிய எங்களுக்கு கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு, அப்போதைய அரசு 61 பேருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் 20 குடும்பங்களுக்கு மட்டுமே வீட்டு மனைப்பட்டா வழங்கினர். மீதியுள்ள 41 குடும்பத்தினருக்கு வீட்டுமனை பட்டா வழங்கவில்லை. அதேபோல் வீட்டுமனை பட்டா மட்டும் கொடுத்தார்கள். ஆனால் இதுவரை அதற்குரிய இடத்தை அளந்து கொடுக்க வில்லை. எனவே, எங்களுக்கு ஒதுக்கிய வீட்டு மனையை அளந்து அத்துக்காட்ட வேண்டும். மீதியுள்ள 41 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா உடனே வழங்க வேண்டும். இது தவிர மயான வசதியின்றி கஷ்டப்படும் நரிக்குறவர் இன மக்களுக்காக தனியாக சுடுகாடு அமைக்க இடம் வழங்க வேண்டும். மேலும் அடிப்படை வசதிகள், கல்வி பயில மற்றும் சுகாதார வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென மனுவில் கூறியிருந்தனர்.

# துரைப்பாக்கத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு மாற்று இடமும், இழப்பீடும் வழங்குக!




தென்சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், துரைப்பாக்கம், அறிஞர் அண்ணா நகரின் 7 மற்றும் 8 ஆம் தெருக்களில் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் வசிக்கும் நிலம் நெடுஞ்சாலை அமைப்பதற்காகக் கையகப்படுத்தப்பட்டு விட்டதால், மக்கள் உடனடியாக வீடுகளைக் காலி செய்து வெளியேற வேண்டும் என நெடுஞ்சாலைத்துறை அறிவிப்பு வழங்கியுள்ளது. பக்கிங்ஹாம் கால்வாயை ஒட்டி அமைந்துள்ள, முன்னர் கடற்பகுதியாக இருந்து, பின்னர் மழைநீர் வடிநிலப் பகுதியாக செயல்பட்ட இந்த உவர்நீர் கழிவெளி வேளாண்மைக்குப் பயன்படாத, கைவிடப்பட்ட நிலமாகும்.

இந்தச் சதுப்பு நிலத்தினை கட்டிடத் தொழிலாளர் உள்ளிட்ட அடித்தட்டு மக்கள் தமது கடும் உழைப்பால் மேம்படுத்தி, வீடுகள் கட்டி, கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர். உள்ளாட்சி அமைப்புகள் இக்குடியிருப்பை அங்கீகரித்து, சாலை அமைப்பு, தெருவிளக்கு, குடிநீர் இணைப்பு, சாக்கடை வடிகால் அமைத்துள்ளன. மக்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகள், கட்டணங்களைச் செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் குறிப்பிட்ட நிலம் தனியார் ஒருவருக்குச் சொந்தமானது என்றும், நிலத்தைக் கையகப் படுத்தியதற்கான இழப்பீட்டுத் தொகை அந்தத் தனியாருக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும், எனவே தற்போது அந்த நிலத்தில் வீடுகட்டி வசிக்கும் மக்களுக்கு எவ்விதமான இழப்பீடோ, மாற்றுக் குடியிருப்போ வழங்கப்பட மாட்டாது என அரசுத் துறைகள் மறுக்கின்றன. சாலை அமைக்கும் பணிக்காக தமது வீடுகள் அகற்றப் படுமானால் மாற்றுக் குடியிருப்பு வழங்கப்படும் என்று கருதிய மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

இதனைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை இணைந்து டிச.7 அன்று துரைப்பாக்கம் ரேடியல் சாலையில் ஏ.தாயுமானவன், சிபிஎம் ஜெயவேல் ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் மருத்துவர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா, மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் இரா.வேல்முருகன், மாவட்டச் செயற்குழு உறுப்பினர் கு.வனஜகுமாரி, திருவன்மியூர் சீனிவாசன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

சிபிஐ மற்றும் சிபிஎம் தோழர்களோடு திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தோழர் ஆர்.சி.சிங் மறைவு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

தோழர் ஆர்.சி.சிங் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு பின்வருமாறு:

புது டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய குழுவின் முன்னாள் அழைப்பாளரும், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினருமான ஆர்.சி.சிங் (ராம் சந்திர சிங்) 2022 டிசம்பர் 10 அன்று இயற்கை எய்தினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்குவங்க மாநில செயற்குழு உறுப்பினர், ஏஐடியுசி மேற்குவங்க மாநில தலைவர் ஆகிய பொறுப்புகளில் ஆர்.சி.சிங் சிறப்பாகச் செயல்பட்டார்.

அவரது மறைவுச் செய்தி கட்சியின் தலைமையகத்திற்கு வந்து சேர்ந்தவுடன், கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா மற்றும் தேசிய குழு உறுப்பினர் டாக்டர் அ அ கான் ஆகியோர் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு விரைந்து சென்று அவரது இரு மகன்களுக்கு ஆறுதல் கூறினார். ஆர்.சி.சிங்கை இழந்து வாடும் அவரது மனைவி மற்றும் குடும்பத்தாருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# மணப்பாறையில் தில்லையாடி வள்ளியம்மை பட திறப்பு விழா

மணப்பாறை விராலிமலை சாலையில் உள்ள எம்.ஜி.ஆர் நகரில் வசிக்கும் சலவை தொழிலாளி பெரியசாமி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், தேசிய தலைவர்களின் நினைவு நாள்களில் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி வருகிறார். அந்த வகையில் தில்லையடி வள்ளியம்மை திருவுருவப்பட திறப்பு விழா நடைபெற்றது. இவ் விழாவிற்கு காலவாய் பெரியசாமி தலைமை வகித்தார். தில்லையடி வள்ளியம்மை திருவுருவ படத்தை சலவைத் தொழிலாளி பெரியசாமி திறந்து வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன், ஒன்றிய துணைச் செயலாளர் பெருமாள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக நகர செயலாளர் முத்துப்பாண்டி உட்பட சமூக ஆர்வலர்கள் எம்.ஜி.ஆர். நகர் பகுதி மக்களும் மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தினர்.

# அச்சம்தவிழ்த்தான் ஊராட்சி கல்குவாரி அனுமதியை ரத்து செய்க

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்




ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் அச்சம்தவிழ்த்தான் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகள் கேட்டு ஒன்றிய அலுவலகம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. கிராம அருகிலுள்ள மக்களை பாதிக்கும் கல்குவாரி அனுமதியை ரத்து செய்ய வேண்டும் , சாலைகளை சீரமைக்க வேண்டும், கழிவுநீர் கால்வாய் கட்டித்தர வேண்டும் , திருவேங்கடபுரத்தில் மயானம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தலைவர்கள் பேசினார்களா. கிளை செயலாளர் மூர்த்தி தலைமை வகித்தார். வார்டு உறுப்பினர் கணேசன் முன்னிலை வகித்தார். தேசியகுழு உறுப்பினர் தி .இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட நிர்வாககுழுஉறுப்பினர் பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ , ஒன்றிய செயலாளர் பலவேசம் ஆகியோர் பேசினார்கள் . பின் ஒன்றியகுழு தலைவர் மல்லி ஆறுமுகத்திடம் கோரிக்கை மனுவை அளித்தனர்

# மாணவர் பெருமன்ற கொண்டலாம்பட்டி மண்டலப் பேரவை




அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் கொண்டலாம்பட்டி மண்டல பேரவை முத்து மில்லில் நடைபெற்றது. டி.சந்துரு தலைமை வகித்தார்.

பேரவை கூட்டத்தை அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் க.பாரதி தொடக்கி வைத்தார். இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பா.தினேஷ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மண்டல துணைச் செயலாளர் டி.ராமு, இளைஞர் பெருமன்ற மண்டல நிர்வாகிகள் க.பாலன், ஜி.எம்.தினேஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மண்டல தலைவராக எஸ்.நந்தகுமார், செயலாளராக டி.சந்துரு, பொருளாளராக எஸ்.டார்வின், துணைத்தலைவர்களாக எம்.பானு, எல்.செல்சியர், வி.அரவிந்த், துணைச் செயலாளர்களாக பி.சேகுவேரா, டி.சந்தியா, எம்.முருகேசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# மாணவர் பெருமன்ற பனமரத்துப்பட்டி ஒன்றிய பேரவை




அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் பனமரத்துப்பட்டி வீரபாண்டி ஒன்றிய பேரவை கூட்டம் மாவட்ட குழு உறுப்பினர் பா.நேதாஜி தலைமையில், ராஜாராம்நகர் பி.எஸ்.வெங்கடாசலம் இல்லத்தில் நடைபெற்றது. பேரவை கூட்டத்தை தொடக்கி வைத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் உரையாற்றினார். கட்சியின் ஒன்றிய செயலாளர் எம்.பாலன், துணைச் செயலாளர்கள் என்.பி.மணிவேல், சி.கிருஷ்ணன், ஒன்றிய பொருளாளர் வி.சின்னசாமி, விவசாய சங்க ஒன்றிய செயலாளர் கே.பி.வி.பூபேஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அமைப்பின் வரலாறு குறித்து மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பா.தினேஷ் பேசினார். ஒன்றிய தலைவராக பி.சத்தியஜீவா, செயலாளராக டி.தமிழரசன், பொருளாளராக ஆர்.அன்பரசன், துணை தலைவர்களாக பி.சஞ்சய், வேலுபிரசாத், எம்.திவத்குமார், துணை செயலாளர்களாக கே.ஆகாஷ், பி.சுசிந்தர்நாத், வி.வீரமணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி

கோவை, சூலூர் தெற்கு வட்டாரம், கண்ணம்பாளையம் தெற்கு கட்சிக் கிளை உறுப்பினர், ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க கிளை செயலாளர் ஜி.கணேசன் – மாசிலாமணி ஆகியோரது மகள் லாவண்யாவுக்கு பூப்பு நன்னீராட்டு விழா நடைபெற்றது. இதில் பங்கேற்ற சிபிஐ மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமி அவர்களிடம் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.1000 அளிக்கப்பட்டது.

## இந்த வார தம்பிக்குறள்

### 100. கடமை காட்டும் இடம்

**கடமை கடமையென்போம் அக்கடமை காட்டும்**
**இடமதே தென்றறி யோம்.**

‘கடமையைச் செய், கடமையைச் செய்’ என்று கூறுவோம். ஆனால், அந்தக் கடமையினை உணர்த்தும் இடம் எது – கடமை புரிய வேண்டிய அறிவு எங்குள்ளது என்பதை அறிய மாட்டோம் !

**கடமை கருதா ஒருவன் மறுத்துப்**
**பிறக்க மயங்கும் மிக.**

கடமை இன்னதெனத் தெளிவுபடுத்திக் கொள்ளாமல் செயல்படுபவனுக்கு, அச்செயல் செம்மையாக நடைபெறாதாயின் மனம் புரியாமல், குழப்பமடையும்.

# நூல் நயம்

## கல்யாணி என்னும் கம்யூனிஸ்ட் கலைஞனின் கால் நூற்றாண்டு கலைப்பயணம்




தியாகி மணவாளன் கலைக்குழுவின் தலைமை கலைஞராக திகழ்ந்த தோழர் கல்யாணசுந்தரம் என்கிற கல்யாணியின் வாழ்க்கை வரலாற்று சுருக்கமே இந்த நூல்.

கம்யூனிஸ்ட் கட்சியை உளமாற நேசித்து அதன் தத்துவத்தையும், வரலாற்றையும் நன்கு புரிந்து கொண்டு. களப்பணி ஆற்றி கம்யூனிஸ்ட் கருத்துக்களை எளிமைப்படுத்தி, மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும் என்று நினைத்து தனது கலைப் பணியை தொடங்கியவர் கல்யாணி.

தியாகி மணவாளன் பெயரிலான கலைக்குழுவை உருவாக்கி கால் நூற்றாண்டு காலம் கலைப்பணி ஆற்றியவர். இவரது கலை சேவையை மக்களிடத்தில் அறிமுகப்படுத்துவதற்காக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

மதுரை சேதுபதி பள்ளியில் படிக்கிற பொழுதே கல்யாணி நன்றாக படிப்பதுடன், நல்ல குரல் வளத்துடன் பாடவும் செய்வார். பள்ளிக்கூடத்தில் இறைவணக்க கூட்டத்தில் பாடுவார். அதுவும் சமஸ்கிருத ஸ்லோகங்கள் நிறைந்த பாடலை சிறந்த உச்சரிப்புடன் படுவார் . இவர் பாடுவதை தலைமையாசிரியர் மிகவும் பாராட்டுவார். திரைப்பட பின்னணி பாடகர்கள் டி.எம்.சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோர் பாடும் திரைப்பட பாடல்களை அவர்களைப் போலவே நன்கு பாடுவார். இப்படியாக பள்ளி பருவத்திலே கலை உணர்வு அவரிடம் துளிர் விட ஆரம்பித்தது. இதுதான் அவர் கட்சி மேடைகளில் சுடர் விட்டு பிரகாசிக்க செய்தது.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இந்த கலைக்குழு தமிழகம் முழுவதும் பயணம் செய்து தொழிலாளர்களை, விவசாயிகளை, மாணவர்களை, இளைஞர்களை தட்டி எழுப்பியுள்ளது. இந்த கலை குழு பட்டி, தொட்டி எங்கும் சமூக அவலங்களை தோலுரித்துக் காட்டியுள்ளது. மகத்தான கலைஞன் கல்யாணியை பற்றி அறிந்து கொள்ள இந்த நூல் பெரிதும் உதவும். அனைவரும் இந்நூலை வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

– சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | பகத்சிங், தமிழில்: எஸ்.ஏ.பெருமாள் |
| பக்கம் | : | 92 விலை: ரூ.130 |
| வெளியீடு | : | சுவடு பதிப்பகம்: 7 ஏ, ரங்கநாதன் தெரு, சேலையூர், சென்னை – 600 073 |

## பொன்னி நதி பார்க்கணுமே




தனது பள்ளிப் பருவ காலத்தில் கிடைத்த அனுபவங்கள், சமூகத்தைப் பற்றிய தான் பார்த்த பார்வைகள், சுற்றுலா, கதை, கவிதை, கட்டுரைகள் போன்றவை குறித்து நூலாசிரியர் ஐயறின் ரெஜி எழுதிய நூலே பொன்னி நதி பார்க்கணுமே

தனது பள்ளி காலத்தில் கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் நாவலின் வழியாக தமிழகத்தின் பண்பாட்டு, வரலாற்று பொக்கிஷங்களான ராஜராஜ சோழனின் தஞ்சை பெரிய கோவிலையும் , ராஜேந்திரன் கட்டிய கங்கைகொண்ட சோழபுரம் கோவிலையும், குந்தவையும் வந்திய தேவனும் கண்களால் காதல் கொண்ட அரிசில் ஆற்றங்கரையும் ,பழையறை நகர பகுதிகளையும், பூங்குழலி மான்களோடு விளையாடி மகிழ்ந்த கோடியக்கரை கானகப் பகுதிகளையும் கண்டு மகிழ்ந்து ரசிக்க வேண்டும் என்ற தன் ஆவலை வெளிப்படுத்தி அதையும் ஒரு நாள் காணுகிற பாக்கியத்தை பெற்றதை விவரிக்கிறார். எப்படி?

“மாலை முதல் காலை வரை இரவெல்லாம் தவமிருந்து காலையில் கதிரவனை காண ஆவலோடு காத்திருக்கும் பூமி பெண் போல” என என்ன அழகான உவமை நாயத்தோடு விவரிக்கிறார் நூலாசிரியர்.

இந்நூலைப் படிக்கிற ஒவ்வொருவரையும் தான் பார்த்த, கேட்ட வரலாற்று நிகழ்வுகளையும், சம்பவங்களையும் கொண்ட இடங்களை பார்க்க வேண்டும் என தூண்டுகிறது இந்நூல்.மாணவர் உள்ளங்களில் சுற்றுலா ஆர்வத்தை விதைக்கும் நூல் இது என்றால் மிகையல்ல.

தன்னை ஒருவன் நேசித்திட வேண்டுமெனில் முதலில் தன்னை அவன் அறிந்து கொள்ள வேண்டும். தான் யார்? தனது பலம் என்ன? பலவீனம் என்ன? தனது பண்பு நலன்கள் என்ன? தனது பொறுப்புக்கள் என்ன? தனது நண்பர்கள் யார்? தனது வாழ்வின் குறிக்கோள் என்ன? இது போன்ற கேள்விகள் மனிதன் தன்னைத்தானே அறிந்து கொள்ள உதவக்கூடியவை. அப்பொழுதுதான் அவன் தன்னைத் தானே புதுப்பித்துக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற முடியும் என மனிதனுக்கு தன்னம்பிக்கை விதைக்கிறார்.தன்னை முழுமையாக நேசித்து, உயர்வாய் மதிப்பவரை நம்மை சுற்றி வைத்துக் கொள்ளுதல். நமக்கு மிகுந்த மகிழ்வையும் நிறைவையும் அளித்திடும்.தன்னைத்தானே நேசிப்பவன் நிச்சயமாய் தன் குடும்பத்தையும், குழந்தைகளையும் தனது சுற்றத்தையும் , மனித சமூகத்தையும் அன்பு செய்வார். ஒவ்வொரு மனிதனும் அறிவால், ஆற்றலால், மதியூகத்தால், உதவும் பண்பால் தன்னைத் தானே பலமாகி கொள்ள வேண்டும். எண்ணி துணிவதற்கு ஒவ்வொரு மனிதனும் தயாராக வேண்டும் அப்பொழுது வெற்றி நிச்சயம்.

இந்நூல் வாழ்வியல் அனுபவங்களையும் , மனிதர்களுக்கு நற்பண்புகளையும் போதிக்கிற ஒரு நூல் .இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்..

–இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | ஐயறின் ரெஜி |
| பக்கம் | : | 136 விலை: ரூ. 200 |
| வெளியீடு | : | பாவை பப்ளிகேஷன், 16, ஜானி ஜான் கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை – 600 014 |

# சுழலும் உலகம்: உலக தொழிற்சங்க சம்மேளன செய்திகள்

## ஐ.நா சபை மனித உரிமைகள் மாநாடு: உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் நிலைப்பாடு.

ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக சபையில்(ECOSOC) உலக தொழிற்சங்க சம்மேளனம் நிறுவன உறுப்பினர் பொறுப்பு வகித்து வருகிறது. அண்மையில் நடைபெற்ற ஐ.நா சபையின் மனித உரிமைகள் மாநாட்டில் உலக தொழிற்சங்க சம்மேளனம் பங்கேற்றது. அதன் பிரதிநிதியாக, நிர்வாக செயலாளர் அனஸ்டசக்கி கலந்து கொண்டு, மனித உரிமைகள் பாதுகாப்பு குறித்த உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் நிலைப்பாட்டைச் சமர்ப்பித்தார். அதன் சுருக்கமான விவரம் பின்வருமாறு:

ஐ.நா சபை மனித உரிமைகள் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது போல், விளிம்பு நிலை மக்களைப் பாதுகாப்பது என்பது மனித உரிமைகள் பாதுகாப்பில் ஒரு முக்கியமான அம்சம் ஆகும். இந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்க அமைப்புகளும், கொள்கைத் திட்டங்களும் அவசியம் என்ற போதிலும், அவற்றை உறுதிப்படுத்த நாம் அரசுகளை நம்பியிருக்க முடியாது. மனித உரிமைகள் பாதுகாப்பு என்பது பல்வேறு சமூகங்களின் ஒற்றுமை மற்றும் அவற்றின் நடவடிக்கைகளைச் சார்ந்துள்ளது. எனவே, மனித உரிமைகள் பாதுகாப்பு என்பது வன்முறை நடவடிக்கைகள் இன்றி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது, சிவில் சமூகம் மற்றும் அரசாங்கங்களுக்கு இடையிலான இணைப்பை வலுப்படுத்துவது மூலம்




கட்டமைக்கப்படும் அமைதிப் பண்பாட்டைச் சாரும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, அமைதிப் பண்பாட்டை உருவாக்க, ஐ.நா பொதுச் சபை சில அடிப்படைகளை வலியுறுத்துகிறது. இந்த அறிக்கை, அந்த அடிப்படைகளுக்கு இடையேயான சார்புத்தன்மை மற்றும் அரசாங்க அமைப்புகள், சமுதாய ஒற்றுமை ஆகியவற்றின் மீதான சார்புத்தன்மையை ஆய்வு செய்கிறது. மனித உரிமைகள் மேம்பாட்டுக்கான தீர்க்கமான நடவடிக்கைகளை இந்த அறிக்கை முன்மொழிகிறது.

ஐ.நா சபை மனித உரிமைகள் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது போல் மனித உரிமைகளை மேம்படுத்த வேண்டும் என்றால், விளிம்பு நிலை மக்களை நாம் பாதுகாக்க வேண்டும். சர்வதேச அளவிலான, இலட்சிய நோக்குடைய விதிகளின் தொகுப்பை நிறுவிட மேற்கொண்ட முயற்சியே ஐ.நா சபை பிரகடனம் ஆகும்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்களுக்கு இனவாதம், இன அடிப்படையிலான பாகுபாடு, பாசிசம், நவீன பாசிசம், நவீன காலனியம் ஆகியவையே முக்கியமான காரணங்களாக உள்ளன என்பதை 20 ஆம் நூற்றாண்டின் வரலாறு எடுத்துக்காட்டுகிறது. இது போன்ற போக்குகளுக்கு எதிராகப் போராடுவதே அமைதி இயக்கத்தின் முக்கியமான பணி ஆகும்.

“அமைதிப் பண்பாட்டிற்கான சர்வதேச ஆண்டு” மற்றும் “அமைதிப் பண்பாட்டிற்கான சர்வதேச தசாப்தம்” ஆகிய ஐ.நா சபை பிரகடனத்தை உலக தொழிற்சங்க சம்மேளனம் ஆதரிக்கிறது. அமைதி, ஆயுத பரவல், மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தகவல்களின் பங்கு மற்றும் மனித உரிமைகள் மீது சிறப்பு கவனம் செலுத்தும் கல்விக்கான நமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

அமைதி, பாதுகாப்பு, தேசிய இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றுக்குப் பயங்கரவாதம் (எந்தவொரு மதம், குழு அல்லது நாட்டில் இருந்து வந்தாலும்) ஓர் அச்சுறுத்தல் ஆகும். பயங்கரவாதத்தை ஒழித்திடப் போராடுவது அமைதி இயக்கத்தின் ஒரு கடமை ஆகும்.

நிலம் மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான பூர்வகுடிமக்களின் போராட்டத்திற்கு உலக தொழிற்சங்க சம்மேளனம் ஆதரவு தெரிவிக்கிறது.

போர் மற்றும் ஏகாதிபத்திய தலையீடுகளுக்கு எதிராக, 21 ஆம் நூற்றாண்டில் அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ள 5 கண்டங்களிலும் உள்ள 130 நாடுகளைச் சார்ந்த நண்பர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு அறைகூவல் விடுக்கிறோம்.

## சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 17 வது ஆசியபசிபிக் பிராந்திய கூட்டத்தில் உலக தொழிற்சங்க சம்மேளனம் பங்கேற்பு


சிங்கப்பூரில் டிசம்பர் 69 வரை நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 17 வது ஆசிய பசிபிக் பிராந்திய கூட்டத்தில் உலக தொழிற்சங்க சம்மேளனம் பங்கேற்றது.

இந்தக் கூட்டத்தில், உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமையக பிரதிநிதிகள் கலந்து கொண்டு இருதரப்பு கூட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் சிறப்பாகப் பங்களிப்புச் செய்தனர். ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் உழைக்கும் வர்க்கம் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து வர்க்கப் பார்வை கொண்ட தொழிற்சங்க இயக்கத்தின் நிலைப்பாடுகள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

## உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் துணை பொதுச் செயலாளருடன் சிலோன் வங்கி ஊழியர்கள் சங்கப் பிரதிநிதி சந்திப்பு

தொழிற்சங்க செயல்பாடுகள் குறித்து கலந்தாலோசிக்க சிலோன் வங்கி ஊழியர்கள் சங்கப் பிரதிநிதி கார்த்திக் உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் துணை பொதுச் செயலாளர் தோழர் ஸ்ரீகுமாரை அவரது அலுவலகத்தில் சந்தித்தார். அவர்களின் தொழிற்சங்க செயல்பாடுகள் குறித்து கலந்தாலோசனை செய்தனர். ளிசிதிகீஹி சார்பாக சிலோன் வங்கி ஊழியர்கள் சங்கப் பிரதிநிதி கௌரவிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் திரளாகக் கூடியிருந்த ளிசிதிகீஹி உறுப்பினர்கள் மத்தியில் அவர் எழுச்சியுரை ஆற்றினார்.





மகாகவி ஹிந்து மதத்திலுள்ள தெய்வங்களை மட்டும் பாடியவன் அல்ல. கிறித்துவ மதத்தின் தேவ தூதர் ஏசுவையும், இஸ்லாம் மதம் காட்டும் இறைவன் அல்லாவையும் பாடிக்களித்தவன்.



பி.சேர்முக பாண்டியன்

# மகாகவி பாரதியின் பார்வையில் மதங்கள்



**மகாகவி பாரதி மத ஒற்றுமையை உயர்த்திப் பிடித்தவன். மத பேதங்களை அடியோடு வெறுப்பவன். எல்லா மதங்களையும் சமமாக பாவிக்கும் சர்வ சமய சமரசக் கொள்கையை நேசிப்பவன் . எல்லா தெய்வங்கள் மீதும் கவிதைகள் செய்து களிப்புற்றவன். ஆனாலும் அவனுடைய கவிதைகளிலும், கட்டுரை தொகுப்புகளிலும் மதம் குறித்த பார்வையில் தெளிவிருந்தது.**

"உலகம் முழுதுக்கும் தெய்வம் ஒன்றே. அதுவே எல்லா மதங்களுக்கும் பொதுவான இறைவனாக வியாபித்திருக்கிறது. அதுவே பரம்பொருள் ஆகும். எனவே மத ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். பெண்ணடிமைத்தனம் மண்மூடிப் போகவேண்டும்" என்பதே மகாகவியின் மதங்கள் குறித்த பார்வை. ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் மதவாத கொள்கைக்கு நேர் எதிரானது.

ஆனால் அந்த அமைப்புகள் மகாகவியை ஹிந்துக் கவிஞன் என்று கொண்டாடுகின்றன. அவனது பிறந்த நாளை பிராந்திய மொழிகளுக்கான உற்சவ நாளாக உயர் கல்வி நிறுவனங்களில் கொண்டாடப்போவதாக சொல்கின்றன. இது மிகப் பெரிய நகை முரண்.

சர்தார் வல்லபபாய் பட்டேலை, அம்பேத்கரை , திருவள்ளுவரை தம்மவர்களாக காட்டிக் கொள்ள முயலும் சங் பரிவாரின் மதவெறி போக்கிரிகளின் செயல்கள் தோல்வி அடைந்து வருவது போல, மகாகவி பாரதியை அவர்களது கவிஞராக காட்டிக் கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடியும்.

உண்மையை ஒளிரச் செய்யும் பாரதியின் கவிதைகள், கட்டுரைகள் முன்னே இவர்களது பொய்களும், போலித்தனங்களும் எரிந்து சாம்பலாகி பொசுங்கிப் போய்விடும்.

மதம் குறித்து பாரதியின் பார்வையும் கருத்தும் என்ன என்பதை அவனது எழுத்துக்கள் மூலமே நாம் பார்ப்போம் .

"ஜாதி மதங்களைப் பாரோம் உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே அன்றி
வேறு குலத்தினராயினும் ஒன்றே"

என்கிறான் பாரதி.

ஜாதி மதங்களைப் பார்க்காமல் , பிராமணர்களையும், இதர சாதியினரையும் ஒரே தட்டில் வைத்து பார்க்கிறான் மகாகவி. சாதி மத பேதங்களை தீமூட்டி வளர்ப்பதன் மூலம் தனது ஓட்டு வங்கியை விரிவுபடுத்த முடியும் என்ற முனைப்பில் செயல்படுகின்ற , ஜாதிய மேலாதிக்கத்தை நிலை நிறுத்த முயலும் ஆர்.எஸ்.எஸ், மற்றும் பரிவார அமைப்புகள் ஜாதி மத பேதங்களை வெறுத்தொதுக்கும் பாரதியை கொண்டாடுவதும், விழா எடுப்பதும், சாத்தான்கள் மகான்கள் போல் வேடமணிந்து நடிப்பதற்கு ஒப்பானதாகும்.

"கண்ணன் என் தாய்" என்ற கவிதையில் பாரதி சொல்கிறான்.

"நான் வேடிக்கை யுறக்கண்டு நகைப்பதற்கே
கோத்தபொய் வேதங்களும் மதக்
கொலைகளும் அரசர் தம் கூத்துக்களும்
மூத்தவர் பொய்ந்நடையும் இள
மூடர்தம் கவலையும் அவள் புனைந்தாள்"

நான் வேடிக்கை பார்த்து சிரிக்க என் தாய் கண்ணன் உண்டாக்கியவையே "புனையப்பட்ட போலி வேதங்கள், மதத்தின் பேரால் நடக்கும் படுகொலைகள், மன்னர்களின் அபத்தமான செயல்கள் , மூத்தவர்களின் போலியான பழக்க வழக்கங்கள் , அறிவற்ற இளைஞர்களின் கவலைகள்" போன்றவை என்கிறான் பாரதி.

மேலும் "வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்பு" என்ற தலைப்பிலான தனது கவிதையில் சொல்வதைப் பாருங்கள்

"கொடுமதப் பாவிகள் குறும்பெலாம் அகன்றன.
யாற்றினிற் பெண்களை எறிவதூஉம், இரதத்
துருளையிற் பாலரை உயிருடன் மாய்த்தலும்,
பெண்டிரைக் கணவர்தம் பிணத்துடன் எரித்தலும்"

கணவர் இறந்ததும் மனைவியை எரித்து சதி போன்ற இன்ன பிற இந்து மதத்தில் உள்ள பிற்போக்கு செயல்களில் ஈடுபடுபவர்களை கொடுமதப்பாவிகள் என்கிறான் . அவர்கள் மீது பாரதி காட்டும் வெறுப்பை இப்பாடலின் மூலம் உணரலாம்.

மகாகவி ஹிந்து மதத்திலுள்ள தெய்வங்களை மட்டும் பாடியவன் அல்ல. கிறித்துவ மதத்தின் தேவ தூதர் ஏசுவையும், இஸ்லாம் மதம் காட்டும் இறைவன் அல்லாவையும் பாடிக்களித்தவன்.சிலுவையில் அடிக்கப்பட்டு மாண்ட ஏசுபிரான் மூன்றாவது நாளில்உயிர் பெற்று எழுந்ததை "யேசு கிறிஸ்து" என்ற கவிதையில் இப்படி சொல்கிறான் பாரதி.

"ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்,
எழுந்து யிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்;
தேசத்தீர் ! இதன் உட்பொருள் கேளீர்;
தேவன் வந்து நமக்குட் புகுந்தே
நாசமின்றி நமை நித்தங் காப்பார்;
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்"

என் தேசத்து மக்களே !, இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்த மூன்றாம் நாளில் உயிர் பெற்று வந்ததன் உட்கருத்து எது எனத் தெரியுமா? நமது ஆணவத்தை ஒழித்துவிட்டால் தெய்வம் நமக்குள்ளே புகுந்து எவ்வித தீங்கும் இன்றி நம்மை காக்கும் என்கிறான் பாரதி.

அல்லாவைப் பற்றி சொல்லும் போது சொல்லாலும் மனதாலும் தொடவொணா ஜோதி என்கிறான் அவன். மேலும் அல்லாவையும், யெகோவாவையும் (தேவனையும்) அவர்களது நாமத்தை போற்றுபவர்களின் திருவடிகளையும் பேணவேண்டும் என்று தனது சுயசரிதையில் சர்வ மத சமரசம் என்ற தலைப்பிலான கவிதை வரிகளில் அவன் சொல்கிறான்.



"பேருயர்ந்த யேஹோவா அல்லா நாமம்
பேணுமவர் பதமலரும் பேணல் வேண்டும்"

பாரதி தனது முரசு பாடலில் மதத்தின் பெயரால் சண்டைகள் வேண்டாம் என்பதை கீழ்க்கண்டவாறு வலியுறுத்துகிறான்

தீயினைக் கும்பிடும் பார்ப்பார், - நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்,
கோயிற் சிலுவையின் முன்னே - நின்று
கும்பிடும் யேசு மதத்தார்:
யாரும் பணிந்திடும் தெய்வம்-பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்,
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று; - இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

உலகில் தெய்வம் ஒன்றே.அது எல்லாப் பொருள்களிலும் வியாபித்திருக்கிறது. அதையே நாம் அனைவரும் வணங்குகிறோம். எனவே மதச் சண்டைகள் வேண்டாம் என்கிறான் பாரதி.

புதிய ஆத்திசூடியில் கடவுள் வாழ்த்து என்ற மரபை பயன்படுத்தும் பாரதி அதை "பரம் பொருள் வாழ்த்து" என புதுமை செய்து எழுதிய கவிதை அற்புதமானது

"சைவத்தின் சிவன், வைணவத்தின் திருமால் ,இஸ்லாத்தின் அல்லா, கிறிஸ்தவத்தின் தேவன் எல்லோரும் ஒன்றே. அவர்கள் அனைவரும் இறைவனைக் குறிக்கும் பரம் பொருளின் பல ரூபங்கள். ஒளி வீசும் அறிவே அப்பரம் பொருளின் இயல்பு. எனவே மத வேற்றுமை பார்ப்பது அர்த்தமற்றது. மதங்கள் வெவ்வேறாயினும், பரம்பொருளாகிய இறைவன் ஒன்றே. அந்த இறைவனை ஒவ்வொருவரும் அவரவர் மதப்படி வணங்குகிறார்கள். எனவே மத சச்சரவு அனாவசியமானது" என மத ஒற்றுமை பேணுவதன் அவசியத்தை தனது புதிய ஆத்தி சூடியை படிக்க துவங்கும் முன்பே வலியுறுத்துகிறான் ..புதிய ஆத்திசூடியின் முதலில் வரும் பரம் பொருள் வாழ்த்தை படித்தால் பாரதியின் மதம் குறித்த பார்வையை நாம் காணமுடிகிறது.

ஆத்தி சூடி.இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உயர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே:அதனியல் ஒளியுறும் அறிவாம்

சுப்பராம தீட்சிதர் பாரதியின் ஊரான எட்டையாபுரத்தை சேர்ந்தவர் . கர்னாடக இசையில் வல்லுநர்.கர்னாடக இசையின் மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதரின் இசைப்பணி குறித்து சங்கீத சம்பிரதாய பிரதர்ஷினி என்ற நூலை எழுதியவர். அவரை மறைவையொட்டி எழுதிய கவிதையில்

"மன்னரையும் பொய்ஞ்ஞான மதக்குரவர்
தங்களையும் வணங்கலாதேன்
தன்னனைய புகழுடையாய் !நினைக்கண்ட
பொழுதுதலை தாழ்ந்து வந்தேன்"

அரசர்களையும், பொய்யான அறிவினையுடைய மதப் பெரியவர்களையும் வணங்காத நான் , உங்களை கண்டதும் தலை சாய்த்து மரியாதை செலுத்தினேன் என்று சொல்லும் இந்த கவிதையின் மூலம் மதங்கள் குறித்த பாரதியின் உள்ள வெளிப்பாடு தெளிவாக தெரிகிறது.

"பழைய பொய்ச் சிலைகளை வணங்குவதை ஒழித்து எங்கும் வியாபித்திருக்கும் பிரமத்தை தொழ வேண்டும் என்று முமது நபிகள் ஒரு புதிய மதத்தை உண்டாக்கினார்" என்று "காமதேனு முகமது நபி" என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறான் பாரதி. எல்லா மதத்தின் தெய்வங்களையும் பிரம்மம் என்ற பரம்பொருளாக பார்க்க பழகியவன் மாகாகவி என்ற கருத்துக்கு இது வலுச் சேர்க்கிறது.

மதம் குறித்த பாரதியின் பார்வை தெளிவானது . உலகில் உள்ளது ஒரே தெய்வம். அது எல்லா மதங்களிலும் பல்வேறு பேர்களில் வியாபித்திருக்கிறது .எனவே சர்வ மத சமரசம் உலகில் நிலவ வேண்டும். மத சச்சரவுகள், மத மோதல்கள், போன்றவை அர்த்தமற்றவை. என்ற கருத்துக்களை தனது கவிதைகளிலும், கட்டுரைகளிலும் பல்வேறு வடிவில் வலியுறுத்தி வருகிறான்.

மதங்கள் குறித்து பிற்போக்கான பார்வையை உடைய வலதுசாரி அமைப்புகள் பாரதியை வெறுக்கவே செய்வார்கள். ஆனால் அவர்கள் பாரதியை போற்றுவதும், அவனை தங்களது கவிஞனாக அடையாளம் காட்ட நடத்தும் கூத்துகளும் உலக மகா நடிப்பு. என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மதம் குறித்த பாரதியின் சிந்தனைகளை இளைஞர்களிடம் எடுத்து செல்வதும், சங்பரிவார் அமைப்புகளின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்துவதும், தமிழ் சமூகம் அவர்களை புறந்தள்ள வைக்கச் செய்வதும் நம்முன்னுள்ள கடமையாகும்.


மாதர் தமிழ்நாட்டின் விழிப்பு என்ற கட்டுரையில் "உலகிலுள்ள மத பேதங்களை எல்லாம் வேருடன் களைந்து சர்வ சமய சமரச கொள்கையை நிலை நாட்ட வேண்டுமென்றால் அதற்கு தமிழ்நாடே சரியான களம்" என்று தீர்க்கமாக தமிழ் மக்களை கணித்தவன் பாரதி. பாரதியின் வழி நடப்போம். தமிழர்களிடையே மத வெறியை தூண்டும் சக்திகளை அடையாளம் கண்டு அவற்றை வேரோடும் வேரடி மண்ணோடும் களைந்தெறிவோம்.

தொடர்புக்கு: 94436 85422

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 17.12.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# உயர்கல்விக்கான கடனை ஒன்றிய அரசு ரத்து செய்ய முன்வருமா?

## நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் கேள்வி




உயர்கல்விக்கான கடனை ஒன்றிய அரசு ரத்து செய்ய முன்வருமா? என்று நாடாளுமன்ற மக்களவையில் கே.சுப்பராயன் கேள்வி எழுப்பினார்.

திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் கடந்த டிசம்பர் 12 அன்று நாடாளுமன்றத்தில் பேசும்போது, ஒன்றிய அரசு பல்வேறு பெரும் நிறுவனங்களுக்கு லட்சக்கணக்கான கோடி ரூபாய்களை தள்ளுபடி செய்திருக்கிறது. ஆனால், உயர்கல்விக்காக கடன் வாங்கியவர்கள் 0.82% மட்டுமே இருக்கின்ற நிலையில் அவர்களுக்கான கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை.

உயர்படிப்பு படிக்க சொந்தத்தில் பண வசதி இல்லாதவர்கள் வங்கியில் கடன் வாங்கிய நிலையில், அதை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கையை வைத்துள்ளனர். அதை நிதியமைச்சர் அவர்கள் நிராகரித்துள்ளார். ஆனால், கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு சலுகை காட்டுவதில் அக்கறை செலுத்தும் இந்த ஒன்றிய அரசு மாணவர்களின் நலனின் அக்கறை செலுத்தவில்லை.

எனவே என்னுடைய ஒரே ஒரு கேள்வி, ஒன்றிய அரசு இந்தியாவில் உயர்கல்விக்காக கடன் பெற்றுள்ள மாணவர்களின் கல்விக் கடனை ரத்து செய்ய முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன். இவ்வாறு பேசினார்.

### சிறு, குறு தொழில்களைப் பாதுகாத்திடுக!

டிச.13 அன்று நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் பேசும்போது,

ஒன்றிய அரசாங்கத்தினுடைய கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளின் காரணமாக, இந்தியாவில் 92% வேலைவாய்ப்பு அளித்து வருகிற சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் அமைப்புகள் (எம்.எஸ்.எம்.இ.) ஏறத்தாழ இறந்து கொண்டிருக்கிறது. பெருவீத அளவில் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய அந்த சிறு தொழில் சிறுகச் சிறுக அழிந்து வருகிறது என்பதற்கு, என்னுடைய தொகுதியில் திருப்பூர் மாநகரில் பின்னலாடைத் தொழில் பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டு வருவதே உதாரணமாக இருக்கிறது.

ஏறத்தாழ 30% ஒன்றிய அரசாங்கத்தினுடைய பொருளாதாரக் கொள்கையின் தீய விளைவுகளால் சாகடிக்கப்பட்டு விட்டது. இப்போது மீதி 70% கொஞ்சம் தத்தித் தத்தி நடந்து கொண்டிருக்கிற நெருக்கடி நிலையில் இருக்கிறது.

இதற்கு காரணமாக இருக்கிற அவர்களின் கொள்கையை மாற்ற வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு உதாரணத்திற்கு, உலகில் ஐந்து கண்டங்களில் உள்ள எல்லா நாடுகளுக்கும், இந்தியாவிலும் சப்ளை செய்யக்கூடிய உற்பத்தியை செய்கிற திருப்பூர் மாநகரத்திற்கு, அங்கு உற்பத்தியாகிற அதே டிஷர்ட்டை, பங்களாதேஷில் இருந்து இறக்குமதி செய்கிறது ஒன்றிய அரசு.

எவ்வளவு புரிந்து கொள்ளாத, உள்நாட்டு நிலைமைகளைக் கூட சரியாக மதிப்பீடு செய்யாமல், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்கிறார்கள். அதுவே உள்நாட்டில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது.

இந்த நெருக்கடியை ஒன்றிய அரசு புரிந்து கொள்ளவில்லை. நான் இங்கே குறிப்பாக குறிப்பிட விரும்புவது, உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்கிற அந்த பனியன் தொழிலை காப்பாற்ற வேண்டுமானால், அந்த பனியன் இண்டஸ்ட்ரி மூலம், ஒவ்வொரு வருடமும் பல ஆயிரம் கோடிகள் அந்நியச் செலாவணி ஒன்றிய அரசுக்கு வருகிறது. அந்த அந்நியச் செலாவணியில் குறிப்பிட்ட சதவிகிதம் திருப்பூரின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, திருப்பூர் மாவட்டத்தினுடைய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அந்நியச் செலாவணியில் குறிப்பிட்ட சதவீதத்தை திருப்பூர் மாவட்டத்திற்கு ஒதுக்க வேண்டும் என்று நான் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்த விரும்புகிறேன்.

அதே மாதிரி ஒரு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, திருப்பூர் அந்நியச் செலாவணி ஈட்டித் தருகிற ஒரு நகரம் என்கிற முறையிலும், வட இந்தியாவில் இருந்து வரும் பெரும் பகுதியினருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற திருப்பூர் இண்டஸ்ட்ரி என்கிற முறையிலும்,

வடமாநிலத்தவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் இருந்து வரும் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது என்ற முறையிலும் இயங்கிவரும் திருப்பூரை காப்பாற்ற ஒன்றிய அரசு கடமைப்பட்டு இருக்கிறதா? இல்லையா? ஒன்றிய அரசிற்கு இதன் மீது அக்கறை இருக்கிறதா? இல்லையா?

பெருவீத அளவில் வேலைவாய்ப்பு அளிக்கிற அந்த திருப்பூரை காப்பாற்ற வேண்டும் என்று கொஞ்சம் கூட சிந்திக்கவில்லை ஒன்றிய அரசு என்பதை அவர்களின் நடைமுறை அனுபவங்கள் உணர்த்துகின்றன. அதை திருத்திக் கொள்ள வேண்டும் என்று இங்கே நான் வலியுறுத்துகிறேன். அதே மாதிரி வெளிநாட்டினர் அதிகம் வருகை தரும் திருப்பூர் நகருக்கு ரோடுகள் எங்குமே சரியாக இல்லை. உள்ளூருக்குள் கார்களில் போகவே முடியாத அளவிற்கு டிராபிக் நெருக்கடி இருக்கிறது.

எந்தவிதமான ரோடும் முழுமையடையவில்லை. நல்ல முறையில் தரம் உயர்த்தப்படவில்லை. எனவே, திருப்பூரின் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக 250 கோடி ரூபாய் சிறப்பு நிதியை இந்த ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டும் என்பதை கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய ஜிஎஸ்டி வழங்கப்படவில்லை. ஒன்றிய அரசு சத்யமேவ ஜெயதே என்ற முழக்கத்தின் கீழ் ஆண்டு கொண்டு இருக்கிற ஒரு அரசு, தன்னுடைய அதிகாரம் செலுத்துகிற மாநிலங்களுக்கு அதிக உதவியும், தன்னை எதிர்க்கக்கூடிய கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களுக்கு பழி வாங்குகிற முறையில் குறைந்த நிதி ஒதுக்குவதும் தர்மம் அல்ல. தர்மத்தை போதிக்கிற உங்களுக்கு ஒருபோதும் அது தர்மமாக விளங்காது. எனவே தமிழ்நாட்டின் தேவைகளை நிறைவேற்ற, உரிய நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதைக் கேட்டு முடித்துக் கொள்கிறேன். இவ்வாறு பேசினார்.

# தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநிலக் குழு கூட்டம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலக் குழு கூட்டம் டிசம்பர் 13 அன்று சென்னை எழும்பூரில் உள்ள இக்சா மையத்தில் பொ.லிங்கம் எக்ஸ்.எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

அகிலஇந்தியதலித்உரிமைகள்இயக்கத்தின் தேசிய தலைவர் புதுவை ராமமூர்த்தி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, மாநிலச் செயலாளர்கள் வழக்கறிஞர் கீ.சு.குமார், கோவை அஸ்ரப் அலி, தென் சென்னை எஸ்.கே.சிவா, விருதுநகர் பழனிக்குமார், நெல்லை சுகுமாரன், லி.உதயகுமார், செண்பகம், உள்ளிட்டவர்கள் முன்னிலை வகித்தனர். அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசியக்குழு உறுப்பினர் ஜி.லதா எக்ஸ்.எம்.எல்.ஏ. உள்ளிட்டோரும் பங்கேற்று சிறப்பித்தனர்.



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



### நூல் வெளியீடு

இதில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில தலைமை குழு உறுப்பினர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் எழுதிய “ஆண்டைகளின் ஆதிக்கத் திமிர் அடக்கிய சிங்கம் சி.கே.மாணிக்கம்” என்ற நூலை தென்காசி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொ.லிங்கம் வெளியிட, அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசியத் தலைவர் புதுவை ராமமூர்த்தி முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். இரண்டாவது பிரதியை திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து பெற்றுக் கொண்டார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளரும், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமைக்கத்தின் பொதுச் செயலாளருமான மு.வீரபாண்டியன் நூல் அறிமுக உரை ஆற்றினார்.

### தினசரி காலண்டர் வெளியீடு

விருதுநகர் மாவட்டம் சார்பில் 2023ஆம் ஆண்டிற்கான தினசரி காலண்டரை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட, தலித் உரிமைகள் இயக்க தேசிய தலைவர் புதுவை இராமமூர்த்தி பெற்றுக் கொண்டார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.